Koviloor Digital Library

ஓம் தத் சத்

பரப் பிரஹ்மணே நமஃ.

ஸ்வர்ணபுரீஸ்வரர்

ஸௌந்தரிய நாயகி அந்தாதியும், செல்வவிநாயகர் செம்பொன்மாலையும்.

இவை

கோவிலூர் மடாலயம்

திருக்கள ராண்டவ ரென்னும்

ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிக ஸ்வாமிகள்

பாதசேகரராகிய,

நியாய சந்திரரும்,

வேதாந்த பாஸ்கரருமாகிய

ஸ்ரீ சுப்பய்ய ஸ்வாமிக ளவர்களால்

இயற்றப்பெற்று,

கோட்டையூர்

க. வீ. சோ. அழகப்ப செட்டியாரால்

சென்னை,

கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்தம் பிரசில்

பதிப்பிக்கப்பட்டன.

Acc. NO. 4482

1917.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிழை திருத்தம்.

பக்கம்.	கவி.	பிழை.	திருத்தம்.
1	0	மைந்தரோடு	மைந்தரோடும்
6	0	பேராந்த	பேரானந்த
7	2	முகத்தோ	முதத்தோ
7	1	மாசௌ	மாசவு
8	1	முத்தைப	முத்தைய
10	8	ஆதந	ஆதலி
11	14	நாயநா	காயநா
13	27	ணடியரிற	ணடியரிற்
14	31	அழலு	அழகு
16	41	குறைத்தி	குளைத்தி
16	42	ணனோந்	ணனோத்
16	42	மாலையனே	மாலையளே
16	44	புகைழ	புகழை
20	76	வாழை	வாழ
20	76	மாயை	மாழை
22	90	பொய்	பெய்
22	90	மநரூப	மநமே
22	90	பேணு	நீபேணு
22	90	நீமற	வேமற
25	1	சேர்ந்தி	சேர்த்தி
25	2	கன்னறுஞ்	கன்னலுஞ்
25	2	நலந்திடு	கலந்திடு
26	4	திரிய	திரியக்
27	10	நாயநன்	நாயகன்
27	11	றரியப்	றரிய
27	11	கைபகடு	கைப்பகடு
27	15	வேணு	வேணே
28	16	மையே	மையோ
29	25	வமர்ந்தி	அமர்ந்தி
31	36	திட	திடச்

Koviloor Digital Library

பக்கம்.	கவி.	பிழை.	திருத்தம்.
31	37	கேட்ட	சேட்ட
32	40	கறந்தா	யிறந்தா
32	40	பற்ப	கற்ப
32	41	கடற்	கட
32	42	வகந்	வனந்
32	43	நாடிய	நாடியி
32	43	வாடிப	வாடிய
32	43	வம்ம	வம்ப
32	43	ரூடிம, வடிவே	ரூடிய, வடிவ
32	44	வியம, டியக்	விடம, டிய
33	46	காரது	காசது
33	47	மலவே	பலவோ
33	48	குமா	குமாகுருபா
33	49	நாப்புற	நாற்புர
33	51	துறவி	துறலி
34	52	மட்ட	பட்ட
35	58	தின், வணமை	திண், வண்மை
35	60	சுவர், தவன்	ஸ்வர், தவள்
35	62	ளர்	ள்
35	63	றழுகு	ற்ழுங்கு
36	65	துலங்க, கையுல	துலங்கப், கையுற
36	66	கண	கண்
37	70	திருப்ப	திருப்பப்
37	71	வெப்பதி	வெய்யதி
37	75	கதித்	கதிர்த்
38	75	வடிவடி	வடிவுடை
38	77	பரவையாற்	பரவைபாற்
38	77	வீட்டிடுஞ	வீட்டிடுஞ்
39	82	பகலி, விழுக	யகலி, விழுகா
39	86	சௌ	சவு
40	91	ரிவனெ்	ரிவணி
40	91	பொன்னுவ	பொன்னுறை
41	95	தலயி	தலையி
41	96	கேட்ட	கெட்ட
42	100	வுறுப்	வுறும்

Koviloor Digital Library

உ

சிவமயம்.

ஓம் மகா கணபதயே நமஃ

அறிவுமிக்கொளி ரன்புடையீர்!

சச்சிதாநந்த நித்திய பூரணராகிய சாம்பசிவப் பெருந்தகை யானவர் அன்பர்க ளியாவருந் தம்மைப் பூசித் தின்புறுமாறு அம்பிகையுடன் புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திற் கோயிற் கொண் டெழுந்தருளியிருக்கு மிடங்களாகிய மகா க்ஷேத்திரங் கள் ஸ்ரீ காசியேமுதல் அநந்த முள.

அவற்றுள், திருவாரூருக்கும் நாகைக் காரோணத்திற்கு மிடையி லுள்ளதும், ஸ்ரீவசிஷ்ட பகவானாலும் காமதேனுவா லும், முசுகுந்தச் சக்கரவர்த்தியாலும், ஸ்ரீ விசுவாமித்திர அகஸ் தியராதி மகரிஷிகளாலும், ஸ்ரீ பார்வதி தேவியாராலும் பூசிக் கப்பெற்றதும், பாற்றீர்த்தம் விருத்த காவேரி முதலிய தீர்த் தங்களால் சேவிக்கப்பெற்றதும் அத்தீர்த்தசேவையின் அவா மிக்கு ஸ்ரீ மகாவிஷ்ணு கயா மாதவ ரென வீற்றிருக்கப் பெறு வதும், ஸ்ரீமன் ஞானசம்பந்த சுவாமிகளாற் பாடியருளப் பெற்றதும் ஆகிய தேவ சான்னித்திய புரமென்னும் திருச்சிக் கல் என்னும் மகாக்ஷேத்திரம் யாவினும் மேன்மையதாம். ஆங்கு எந்தையாகிய சிவபெருமான் சக்தியாயதாக்ஷியாகிய தேவியா ரோடும் ஸ்ரீ சுந்தர விநாயகர் ஸ்ரீ சிங்கார வடிவேலவர் என்னும் மைந்தரோடு ஸ்ரீ நந்திதேவாதி கணங்களோடும் ஸ்ரீ நவநீத ஈசுரரெனத் திருநாமந் தரித்து வீற்றிருந்தருளுவர்.

அதன் கீழ்ப்பால், ஸ்ரீ இலக்குமி தேவியாரால் தாபிக்கப் பெற்றுப் பூசிக்கப்பெற்றதும் ஸ்ரீ கமலாலய மகான்மியத்தில் அட்டதிசைகளிலும் பிரகாசியாநின்ற இரத்தின புரீஸ்வர சுவாமி யெனப் பெயரியதும், சுவர்ண புரீஸ்வர சுவாமி யெனப் பிரசித்தமாயதும் ஆகிய சிவலிங்க வடிவமாக எம்பெருமான் ஸ்ரீ சௌந்தரிய நாயகியா ராகிய தேவியாரோடும் ஸ்ரீ செல்வ விநாயகராகிய சித்தி விநாயக ரென்னும் சுவர்ண விநாயகர் சுவர்ண வடிவேலவ ரென்னும் திருமைந்தரோடும் திருநந்தி

Koviloor Digital Library

தேவர் முதலிய கணங்களோடும், பரம அன்புடைய ஸ்ரீ இலக்ஷுமி தேவியாரோடும் வீற்றிருந்தருளுவர்.

அத்தலமே, சுவர்ண வடிவமாகிய ஸ்ரீ இலக்குமி தேவியாரால் வர்சஞ்செய்யப்பெறுதலானே சுவர்ண புரி யெனவும், திருமங்கை யாழ்வாரால் ஸ்ரீரங்க ஆலயத் திருப்பணி புரிவான் நாகையி லரிதிற்கிடைத்த பொருளைக் கொணர்ந்து புதைத்து வைத்து, பூமிக்குரியோன் வந்து போராடத் தமது சீடனுகிய தோலா வழக்கனுல் அவனைச் சயித்து மீண்டும் அப்பொருளை ஸ்ரீ சுவர்ண புரீசுரர் திருவருளாற் கொண்டு சென்றமையின் **பொருள் வைத்த சேரி** யெனவும், அன்பொடும் வந்தடைந்தவர்க்கு, ஸ்ரீ சுவர்ண புரீசுரர் ஸ்ரீ உகந்த ஞான தேசிகர் வாயிலாய்ச் சிவ ஞானங் கொடுத்துப் பிறவாத்தகைமையை நல்கலான் **பிறவாச்சேரி** யெனவும் பெயர் பெற்றிலங்கும். இத்தகைய அருமைப் பெருமான் அழகு மிகுத்த நாயகியாரோடும் வீற்றிருக்கும் ஆலயம் நெடுநாள் ஸ்ரீ தக்ஷிண மூர்த்தி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் ஸ்ரீ வித்தியாரண்ணிய முனிவர் மரபின்கண்ணெழுந்தருளிய, வாரத்திற் கொருமுறை பாகிய திருஷ்டியையடையும் ஸ்ரீ முத்தைய ஞான முனிவரது சீர்பாதம் பரவிய ஸ்ரீ உகந்த தேசிக ஞானுசிரியர் மரபுடையார் மேற்பார்வையில் சூரியனைக் கண்ட தாமரை மலர்போ விலங்கி நிகழ்ந்தது. சின்னுட்கு முன்னுள் ஜீவர்களுடைய பாவ கரும வயத்தால்அம் மரபுடையார் கையினின்றும் நீங்கி நீரற்ற தாமரைபோல் நிரம்ப ஜீர்ணதசையை யடைந்தது. அவ்வாலயத்தை முன்னிலைமையாகிய நன்னிலைமைக்குக் கொண்டுவர வேண்டும் என்றுத்தேசித்த சில நண்பர்கள், ஷெ ஸ்ரீ உகந்த தேசிகர் பாதமலர் பரவிய ஸ்ரீ ஆண்டவ ரென்னும் ஸ்ரீ முத்திராம லிங்க ஞான தேசிகர், அன்பர்க்கருள வீற்றிருப்பதும், திருநெல்லையம்மையின் சாந்நித்தியத்தோடுங்கூடியதுமாகிய ஸ்ரீகோயிலூர் மடத்திற்குச்சென்று ஸ்ரீ ஆண்டவ ரென்னும் பாற்கடலினின்று முண்டாகிய கருணை நிதியாகிய ஸ்ரீசிதம்பர ஞான தேசிக ரென்னுஞ் சிந்தாமணியின் ஒளியாகிய ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக ரென்னும் திருக்களராண்டவரது திவ்ய மகிமையை யொளிர்விக்கும் பரஞ்சோதி

Koviloor Digital Library

வடிவ மிது வெனப் புகழும் பெயர்படைத்து ஆங்கு ஞான பீடத்தில் ஆசிரியரா யெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீம தண்ணுமலை ஞான தேசிகரது திருவடிகளைத் தெரிசித்துப் பன்முறை வணங்கியேஷி ஸ்ரீசுவர்ண புரீசுரரது ஆலய ஜீர்ணத்தன்மையைப் பலவாருகத் தெரியப்படுத்தக் கருணையே மலையாகிய அப்பெருமான் மநமுருகி அவ்வாலயத்தைத் தாமே சீர்திருத்தித் தருவதாகத் திருவாக்களித்த மாத்திரையானே அவ்வாலயத்திற் குரிய சர்வ சுதந்திராதிகளை சந்நிதியிலே சமர்ப்பித்து மீண்டனர். திருப்பணியே திருவுருவமாகிய திருக்கள ராண்டவர் திருவருள் பெற்ற சீரருணுசலேசர் மநம் புகுந்த அளவே அவ்வாலயம் சீர்திருந்திப் பூசை யருச்சனை முதலியன சிறப்புற் ரேங்கா நின்றதை நோக்க இனி அதிக உன்னதியை யடைவுறு மென்றறைவது அதி யற்புதமேயாம். கோடானுகோடி தந வைசிய சிகாமணிகளாகிய குபேரரானே பூசிக்கப் பெற்ற ஸ்ரீமத் தேசிகர் மநத்திற் குடிகொண்ட ஆலய விஷய எண்ணத்தை எண்ணி எண்ணி பொருள்வைத்தசேரி யன்பர்க ளியாவரும் குதூகலத்துடன் ஆநந்தக் கூத்தாடாநின்றனர். பொருள்வைத்தசேரி ஞான பீடத்தி லெழுந்தருளி யிருந்த ஸ்ரீசிங்கார ஞான தேசிகர்பா லெழுந்தருளித் தமக்குப் பூஷணம் வேண்டிய எனதன்னையாகிய ஸ்ரீ சௌந்தரிய நாயகி யம்மையாரிடத்திற் பேரன்பு பூண்ட ஸ்ரீம தண்ணுமலை ஞான தேசிகரது திருநோக்கம் இவ்வாலய முற்றதை, நோக்கிப் பொருள் வைத்தசேரியில் வா ழன்பர்க ளியாவரும் இரவும் பகலும் புகழ்ந்து பேசிக்கொண்டாடா நின்றனர்.

அழகே திருவுருமா யமைந்த ஸ்ரீசௌந்தரிய நாகியயம்மையார்க்கும் ஸ்ரீ சுவர்ண புரீசருக்கும் ஓரந்தாதியும் அவர்களீன்றருளிய குமாரராகிய ஸ்ரீசெல்வ விநாயகராகிய ஸ்ரீ உகந்த ஞான தேசிகர்க்குப் பொன்கொடுத்த விநாயகருக் கொரு செம்பொன்மாலையும் செய்விக்கவேண்டு மெனக் கோட்டையூர் கவீ. சொ. அழகப்ப செட்டியாராகிய ஸ்ரீ திருக்கள ராண்டவர் பாதபத்ம சேகரர் வேண்டிக் கொண்டதை, ஸ்ரீவீரசேகர ஞான தேசிகரது பாதசேகரரும், நியாய சந்திரநும், வேதாந்த பாஸ்

Koviloor Digital Library

காரும் ஆய ஸ்ரீ வீர. சுப்பைய்ய சுவாமிகளிடத்திற் றெரிவிக்க அவர்களும் தமக்கு முன்னம் அம்மையாராகிய ஸ்ரீசௌந்தரியநாகியார் தாம் பொருள்வைத்தசேரி ஞான பீடத்தில் வசித்த காலத்தில் மகாவாக்கியப் பொருளை எழுந்தருளி வந்து செய்யுள் மூலமா யுபதேசித்தருளிய பிரகாரம், அந்நிலையாகிய ஜீவன் முத்திப் பான்மையை யடைவான் அழகம்மையாரோடு கூடிய ஆடகப் பெருந்தகையையும், அரும்பொருட் செல்வ விநாயகரையும் பாட வேண்டுவது இட்டமே, இப்பணிகிடைத்தது பெரும்பாக்கிய மென மகிழ்ந்து விரைவிற் பாட, அவற்றை, க.வீ.சொ.அகழகப்பசெட்டியார் மூலமாக அச்சுவாகன மேற்றி ஸ்ரீசௌந்தரிய நாயகி சந்நிதியில் அரங்கேற்றப் பெற்றன.

யான் ஸ்ரீம தண்ணுமலை ஞாந தேசிகர் ஆணையானே ஷை ஞாந பீடத்தைப் பரிபாலித்து வருவதுடன் இவ்வாலயப் பணியில் அத்தேசிகர் ஏவுவதைச் சிரமேற் கொண்டு ஸ்ரீசௌந்தரிய நாயகியார் திருவருட்குப் பாத்திரமாகப் பெற்றேனே யென்னும் பேரானந்தக் கடன்மூழ்கி நடக்கும் பெருந் திருப்பணியை எதிர் நோக்குகின்றேன்.

இவ்வாலயத்தின் சந்நிதியில் வைகும் திருக்குளமும் ஆலயத்தொடுஞ் சேர்ந்து நறுமணந் தங்கிய நற்றீர்த்தத் தொடும் குழவியு மிரங்கு சோபாநமார்க்கங்களோடும் ஸ்ரீசௌந்தரிய நாயகியாரின் சந்நிதியைச் சோபித்துக் கொண்டிருப்பதென்றே வெனவு மவா மிக்குளேன்.

நற்காலம் வரின் யாவு மினிது கைகூடு மென்னும் ஆன்றோர் வாக்கியம் பொய்யாமோ, ஆகா தாகாது, ஸ்ரீம தாண்டவர் முன்னிலையாய நன்னிலைக்கே கொண்டுசேர்ப்ப தொன்பது திண்ணமேயாம். சுபம்.

இங்ஙனம்:

வீர. மெய்யப்ப சுவாமி,

கோ. ஆ. பெரிய மடம்,

பொருள் வைத்த சேரி, சிக்கல்.

Koviloor Digital Library

ஸ்ரீ உகந்த ஞாந தேசிகர் வணக்கம்.

காமமே முன்னுங் கடும்பகை துறந்தே கரமதே பயிக்க பாத் திரமாய், நாமமே யுருவ மென்பது மறந்து நாடிநின் னுரு வினி னிலேத்தே, சேமமே யடையத் திருவரு ணயவாய் செல் வமே யென்னுயிர்த் தேவே, ஓமெனும் பொருளே பொருள் வைமா நகர்வா ழுகந்ததே சிகசிகா மணியே. 1

மணியொடு மோடுஞ் சமமதாய்க் கண்டு மாசதா சிவப்பிர மனேப்போ, லணிபெருஞ் சகஜ சமாதியை யடைந்து வாநந்த வாரியென் றடைவேன், எணியவை யினிய வன்பருக் குதவு மெந்தையே யெனக்கருள் புரிவாய், புணியர்வாழ் பொருள்வை மாநக ருறையும் போதனே யுகந்ததே சிகனே. 2

ஸ்ரீ வீரபத்திர ஞாந தேசிகர் வணக்கம்.

செய்யநற் குணமுஞ் செழுந்திருத் துறவுஞ் செகமெலாந் திருணமென் னேக்கும், ஐயபெற் றுய்ய வடியனேற் கருளா யம்பிகை பாகனே மநத்தில், மெய்யுறப் படுத்தி மேன்மையே மிகுத்து மேலவர் பணிந்திட விருந்தோய், துய்யனே வீர பத்திரத் துரையே துகளறுந் தேசிகோத் தமனே. 1

உத்தம குணங்க ளென்றுயா னடைவே னுயர்பத மென் றுயா னடைவேன், சித்திரப் பதுமை யொத்ததண் சமாதிச் செல்வந்தா னென்றுயா னடைவேன், முத்திரா மேசன் வணங் குறும் பதத்தோய் முத்தியின் வடிவமா மிதத்தோய், சத்திய ஞாந வடிவமா முகத்தோய் சற்குரு வீரமா தவனே. 2

ஸ்ரீ சிங்கார ஞாந தேசிகா வணக்கம்.

மாதவர் வணங்கும் ஞாநசிங் கார வள்ளலே மாசௌந் தரிய, மாதெனு மனேமுன் னருளிய கவியை மகிழ்ந்துநீ யரு ளிடல் வேண்டும், தீதுறு சிறுவ னுதலின் மறந்து திரியினும் பொருளினே மறவேன், ஓதிட லெளிதெம் முமையமை யும்பா லுயர்தருந் தேசிகோத் தமனே. 1

Koviloor Digital Library

சுடரிழை வேண்டிச் சுந்தரி தோன்றிச் சொல்லுத லெளி துகொ லடியேன், மடமையை யறுக்கு மாண்புடை யிறைவ மைந்தனுக் கருள்செய லுரித்தே, குடவளை தாவும் வயலுடைப் பொருள்வைக் குருபர பரமநித் தியனே, தடமுலை மாதர் மயக் கறுத் தருளும் சத்திய ஞானதே சிகனே. 2

ஸ்ரீ முத்தைய ஞாந தேசிகர் வணக்கம்.

எங்கிருந் திடினு மெழிற்பத மறவா வியல்பது மின்குண வியல்பும், பங்கமில் பாலர் போலவே பயிலும் பாண்மையு மெனக்குநீ யருள்வாய், தங்குறு பதத்தி லிருந்துல கனைத்துந் தான்றுரும் பெனவிளை யாடும், துங்கமெய் யிறைவ முத்தைய ஞாந தூயமெய்க் குரவனே போற்றி. 1

முத்திரா மேசன் முத்தந்தந் திடலான் முத்தைய னெனும் பெயர் புனைந்தே, யித்தரை யிடையெம் போலிய ரிறையை யெளிதினி லறிந்துவாழ்ந் திடுவான், தத்துவ நிலையை வழக் கினி லுணர்த்துந் தயைமிகுந் தேசிகோத் தமனே, சித்தரும் பரவும் பொருள்வைமா நகர்வாழ் செல்வனே ஞாநதே சிகனே. 2

ஸ்ரீ சட்டையப்ப ஞாந தேசிகர் வணக்கம்.

கருணைமா நிதியின் கானிழன் மருவிக் கழனிமா நகர் முதல் பொருள்வை,யருணெறி யெனவிவ் வகிலருக் குணர்த்த வாரிய பரம்பரை வளர்த்தும், தெருணிறை குரவ சட்டையப் பேசச் செல்வனே பல்வளத் தாசை, மருணெறி யடிய னுய்ந் திட வருளாய் மலரடி வணங்கி வாழ்த் துவனே. 1

சனகனைப் போலு மதிககம் பீர சம்பிர தாயமே யிலக் கும்,அனகனே யடியர்க் கருள்செயு மிறையே யடியனுக் கருதிந மருளாய், பனகனும் பணியும் சட்டையப் பீச பாரினற் றிலக மாம் பொருள்வைத், திநகரான் மறையும் பொழினக ருடை யாய் செல்வனே ஞாநதே சிகனே. 2

சுபம்! சுபம்!! சுபம்!!!

Koviloor Digital Library

ஓம் மகாகணபதயே நம:

ஸ்ரீ சுவர்ண புரீசுரர் சௌந்தரிய நாயகி யந்தாதி.

விநாயகர் வணக்கம்.

வலம்புரிந் தடியவர் வணங்கி வாழ்ந்திடும்
பொலம்புரி யிறைவனைப் பொற்புறு மிறைவியை
மலம்புரி துயரற மகிழ்ந்து பாடிட
நலம்புரி மாமுகன் நளினம் போற்றுவாம்.

நிறைவ தாகிய நின்மல வறிவினை நிகழ்சரா சரமெல்லா, முறைவ தாகிய வகடுறு முமையினை யொருபுடை வைத்தானை, யறைவ தாகிய பொருள்வைநன் னகரினி லமர்ந்தருள் சுரந் தானை, யிறைவ னெம்பெரு மானென வநுதிந மிறைஞ்சி யேத் திடுவாமே. 1

இடுவ தென்னைகொ லன்னமே யடியவர்க் கென்றுணர்ந் திடாடோர், தொடுவ ளையுறுஞ் சுந்தரி மந்திரத் தோகையள் தொல்லோராம், நடுவி னின்றொளி ருகந்ததே சிகன்முத னுயடி யேனீருய்க், குடிவ ளர்த்தினள் குறையெலாந் தவிர்த் தனள் குரைகழல் தொழுவாமே. 2

தொழுத முதுநின் றறிவினிற் றொடர்ந்திடுந் தூயமெய் யடியார்க்கும், பழுத றுத்திடும் விகற்பமில் பான்மையைப் பண் பினு னளித்தானை, முழுது டற்பொரு ளாவியை யளித்து யான் முதமொடுந் தொழலென்றே, தழுத ழுத்தமெய் யன் புடன் பொருணகர்த் தண்ணிலாத் தரித்தோனே. 3

Koviloor Digital Library

தரித்தி ரந்திரம் பொருளினை விழைதல்போற் றமிய னேன் மநநாளும், வருத்து வெங்கொடுங் காமமுற் பகை யெலாம் வகைவகை பொடிந்தேக, வருத்த லென்றுகொல் லாநந்த வமுதினை யடியனேற் கெனவேங்கும், திருத்தி யாளு தல் நின்பரஞ் சௌந்தர்ய தேவியே தெரியாதோ. 4

தெரிவு மற்றெழுந் தெரிவிலா மையுமறத் தெவிட்டிடாப் பதத்தேகி, மருவு மென்மநந் திருசிய மறதியா மங்கையை மணந்தாடி, யருவ மாயிட லென்றுகொல் லறிகிலே னடிய னேன் குலத்தேவே, தெரிவை பாகனே பொருள்வைநன் னகருறுந் தெய்வமே சிவனேயோ. 5

சிவனை யாடிடக் கண்டுள மகிழ்ந்திடுந் தேவியே யென் றுயே, கவன மென்னிடத் ததிகமாய்ச் செலுத்திடல் கடன் கடுக் கொடியேனுன், பவன வெவ்விரை மநத்தினன் பய னறு பஃறெழுழின் மிகத்தேடும், அவனெ னத்தள னீதியன் றழகினுக் கழகளித் திடும்வாழ்வே. 6

வாழ்வும் வையமும் வழங்கிடும் பொருள்களும் வந்துறு மனையாவும், தாழ்வு செய்திடு மெனத்தெரிந் திருந்துமியான் றழுவிட நினைந்தாவா, ஆழ்வ தென்னையோ வறிந்தில னையனே யடியனேன் றனைக்காப்பாய், மாழ்வ தின்றிய பொருள்வைமா நகர்வளர் வள்ளலே மாதேவா. 7

மாது செய்திடுஞ் சூதிதென் னன்னைகேள் மலைக்குய முதற்காட்டிக், கோத ளித்திடு மநத்தினை யழுத்திடுங் குவலய மெய்யாக்கும், ஆத நனின் தடிமல ரடைந்தன னயற்கதி யது காணேன், நீத விர்த்திடு துயரெலாஞ் சௌந்தர்ய நின்மல நிதி யாயே. 8

நிதியி னைவெறுத் தடியவர் துறவினி னிகர்சுக ரென வோத, அதிம துரமெய் யறிவினி னழுந்தியே யாநந்த கனமா னோர், மதிகெ டுந்தடி யடியனே மாஞ்செலு மார்க்கமே யினி தாகக், கதியு றுதலும் விதிகொலோ பொருணகர்க் கடவுளே கண்பாராய். 9

Koviloor Digital Library

பாரை யாண்டுவின் பாதலத் தாணையைப் பகலிராப் பல்லூழி, யாரை யாவென வண்டங்க ளாயிரத் தெட்டினை யடைந் தோனுஞ், சூரை வென்றசிங் காரனைப் பெற்றிடுஞ் சுந்தரி யெனையாள்வாய், தேரை யாயினு நீர்பெற வில்லையோ தென்னவன் பெருவாழ்வே. 10

வாழி யையனே பொருள்வைமா நகர்வளர் வள்ளலே வழியாக, வூழி வூழியாய் வந்தவ னல்லவோ வுனைநினை மனனுகிக், கோழி கூவுமுன் னெழுந்துனைப் பணிந்துவெங் குறை யெலாங் குறைப்பாயென், மாழை யங்கிரி வில்லனே யெனத் திநம் வழுத்திட வழங்காயே. 11

காய நீரினிற் குமிழிபோ லழிவது காரிகை யார்போகம், மாய மல்லவோ விதைத்தவிர்த் தாளுதல் மாதநின் கடனுகும், தாயு னதரு ளில்லையேற் றமியனேன் றரணியி லென்செய் வேன், நோய கன்றிலாக் குழவிபோல் வாடியே நொந்திட னலனன்றே. 12

அன்றெ னக்கொரு வருந்துணை யென்மாம மதனொடு நான்சேரேன், என்று கொள்ளினு மதுவிடா தென்றனை யிழுத்திடு முலகூடே, வென்ற வைம்புலக் காட்சியர் வணங் குறும் வேதமெய்ப் பொருண்ஞானக், குன்ற மெய்யனே யரு ளுதி பொருணகர்க் குலவிடும் பெருமானே. 13

பெரும னுந்தொழும் பெருமையாய் சௌந்தர்யப் பெற்றி யாய் பிழைநாயேன், ஒரும நத்துட னின்றனை யுன்னிடா துழன்றிட னலந்தானே, கருமை தீட்டிய கண்ணியர் மோக முங் நாயநா னெனவுனும், பிரம வாநந்தப் பீடைக ளல் லவோ பேயனேற் கருளாயே. 14

ஆயும் போதினி லதுநிலை யாயிடு மருமைதா னெதுவா கும், தூய மங்கையும் பொருள்களு மென்செயுந் துயர்மாந் தனக்கியும், மாய மல்லவோ விவையெலா மெனவெணி மயங் கிடா துனைவாழ்த்தில், தோயு மாநந்தத் தெல்லையென் சொல் லுதி சொர்ணமா புரிநாதா. 15

Koviloor Digital Library

நாத முங்கடந் தொளிர்ந்திடு நாயகி நவிலெழிற் பெயர் வாழ்வே, ஆத காதவ னெனவெனே யெண்ணினு லடியனே னென்செய்வேன், நீதி யாகுமோ பெற்றவள் கைவிட னினக் குஞ்சம் மதந்தானே, வேத நாயகி பொருள்வைமா நகர்வளர் வித்தகி மெய்த்தாயே. 16

மெய்யைப் பொய்யென வையனே் மேலவர் விளம்பியு மறியாமன், மெய்யை மெய்யென வுழன்றன னடியனேன் மிளிர்மல மல்லாமல், துய்ய நற்பொரு ளுண்டுகொ விதன் கணே துயர்க்கெலா மிடனுகும், செய்யுங் காரிய மறிகிலேன் பொருள்வைமா நகருறை சிவனேயோ. 17

சிவசி வவென மாநினைந் தநுதிநஞ் சிந்தைதா னகலா மல், தவம்வ ளர்த்திடல் சதாசிவப் பிரமம்போல் தமியனே னென்றேதான், உவம னின்றிய முலேயினிற் பாலுகுத் துல கினைக் காத்தாளும், நவச வுந்தர்ய நாயகி நளினமே நாயினேன் சரணுகும். 18

ஆகு மிங்கிது வருநல மல்லது வாகிடா தெனவாழ்ந்தே, போகும் பொய்மநப் பின்னரே தொடர்ந்தியான் போவது மறியாயோ, ஏக மெய்ப்பொரு ளென்றுநா னடைவதோ வெளியனே னென்செய்வேன், மோக மற்றவர் தொழுதிடும் பொருணகர் முதமொடுந் துதைவோனே. 19

துதையு மென்மந நின்பதத் துகளினிற் றுட்டவா தனே தானும்,அதையுஞ் செய்திட முடித்திடா திடர்செயு மம்மையே வலர்ந்தேனியான், கதையென் சொல்வது காலமூன் றறிந்தி டுங் கன்னியே யெழிற்றுயே, சுதைய ருளுதி கந்தனுக் கென மிகச் சுகமுற வடியேற்கே. 20

அடிகள் கன்றிடச் சுந்தரப் பெருந்தகைக் கன்றுதா ளுரு ரில், பொடிகள் குன்றிட நடந்ததை நினைந்திடும் புண்ணிய ரெண்ணுமன்,மிடிக ளொன்றிடும் வாழ்வினி லாழ்வரோ மெய் யரு ளடையாமல், படிகள் வென்றிடும் பொருணகர்ப் பண் ணவ பாவியேற் கருளாயே. 21

Koviloor Digital Library

அருளு மெய்யுரு நீகொள லன்றியு மப்பனுக் குருவீந்த, தெருளு ருவளே தெய்வமே யெனைப்பெற்ற செல்வமே யிம வானீ, பொருளு றுநகர்ப் புண்ணியப் புதல்வியே புங்கவர் மிகப்போற்றும், இருளு ருடாச் செய்வளே சௌந்தர்ய வின் பமே யென்தாயே. 22

வேறு.

என்மந மறிவி னிலைத்துல கியற்கை யெண்ணிடா தேகமா யிலங்கிப், பொன்மலை யடுத்த காகமே யெனயான் பொற்புற விருக்குநா ளுளதோ, பொன்மலி நகரென் றமரர்க ணெருங்கிப் பூசைகள் செயமிக மகிழ்வோய், நன்மந வழகின் னுயகித் துணையாய் நாயகா நம்பனே யன்பே. 23

அன்புரு வான வின்பமே யடியே னன்னையே முன்னை யே நினது, துன்பமில் பதத்தைப் பம்பின னெனினுந் துயர் மந மாற்றுத லாற்றேன், என்பெருந் துணையே யென்னுயி ருருவே யெளியனேற் கருள்புரி தேவே, மன்பெரும் பொரு ள்வை மாநக ருறையு மரகதச் சௌந்தர்ய மாதே. 24

மாதரின் காதல் மயக்கிட மயங்கி மலவுட லமுதமாய் மநத்தில், தீதுற நினைந்து துயருறு நினது செல்வமெய்க் குமரனெற் கருளா, யோதுத லகன்ற வொருமநத் தவர்க ளுண்ணினைந் துருகியே வாழ்த்தும், தீதகல் பொருள்வை மாநக ருறையுந் தேவனே மூவர்கண் முதலே. 25

முதலொடு மிடையுங் கடையது மில்லா முதல்வியே முத் தர்தம் வாழ்வே, நிதநினை மறவாச் செல்வமே யடிய னித்த லும் வேண்டுவ லருளாய், விதம்வித மாக வேண்டுவர் வேண் டும் விழைவெலாம் விருப்புட னருளும், புதர்பணி பொருள் வை மாநகர் பொலியப் பொருந்திடு பொற்பினு யகியே. 26

நாயினுங் கடைய நாயினே னெனையு நாடிநின் னடியரிற கூட்டிப், பேயெனு மநத்தை யடக்கிட வருளைப் பெரிதினி னருளினு யடியேன், றூயவப் பதத்தை மறந்திருந் தயின்று துகளையே சிரங்கொள லழகோ, வேயுறு தோளி பங்கனே பொருள்வை வேந்தனே சாந்தனே விமலா. 27

Koviloor Digital Library

விமலமெய் யடியர் போற்றுறுங் கருணை விமலையே யமல னுக் கினியாய், மும்மலமு மறுக்கும் வழியினை யளித்து முற்று றும் வகையளித் திலையே, கமலைமெய் பணியுங் கனகமா நகர் வாழ் காதலி மாதவர்க் கினியாய், குமலம தறுக்குங் குழைகழ லுடையாய் குவலய மீன்றருஞ் சரியே. 28

குஞ்சர வதனன் குமரவே ளிருவர் குளிர்ந்துவாழ்ந் திடு தல்போ லடியேன், மஞ்செழிற் களத்து மாணிக்க மலையே மங்கையின் பங்கனே கங்கைச்,செஞ்சடை நடனச் செல்வனே பொருள்வைச் சேவக வாழ்ந்திட வருளாய், துஞ்சலற் றிடுவர் தொழுதிடு மிறைவ துய்யனே மெய்ம்மறைத் துணிபே. 29

துணிந்தவர் வேதத் துணிபினை யுளத்திற் றுன்னிநன் னிலையினைத் துதைய,மணந்தபுன் மகளிர் போகமே விழைந்து மாழ்கிட னீதியோ வருளாய், குணந்தரு நீறு மக்கமா மணியுங் குலவுசெந் நாவிலைந் தெழுத்து, மணிந்தவ ருறையும் பொருள் வைமா நகர்வா ழும்மையே யழகினு யகியே. 30

அழலுரு வான வமுதினை யணைத்து வாலவெங் கொடு மையை யடக்கும், அழகநின் னுருவ மியாவுமென் னுளத்தி லகர்நிச நினைந்துநின் னிடத்தே, மழையெனக் கடலி லழுந்தி நின் மயமாய் மாசுகம் பெறுவதென் றறியேன், பொழி னிறை பொருள்வை மாநகர் வாழும் போதமெய் யுருவனே பொருளே.

பொருளென லுனையல் லாதுமற் றெதுவும் பொருந்திடா தாதலாற் புகழோர், அருளிடு நினது திருவடி யணைந்து வன் புரு·வாயின ரடியேன், இருளினி லிருந்திங் கேங்கியே வாடி யென்செய்வ தெனவறி யாமன், மருளுத லழகோ மாதநீ யிரு ப்ப மாழையம் பதியினர் வாழ்வே. 32

இனன்மதி யழலை யெழிற்கணு யுடைய வெம்பெரு மானடி யவரை, மனனினைந் துலக வாழ்க்கையை வெறுத்து மற்றவர்க் கேவல்செய் வாழ்வை, மனுமற மில்லார் மனுடரோ வறியேன் மற்றவர் கூட்டமே யருளாய், பொனினிறை நகரிற் பொலிந்துவா ழிறைவ புங்கவர் போற்றுபுண் ணியனே. 33

Koviloor Digital Library

புண்ணிய பாவ மறிந்திடார் கோயிற் புறந்திரிந் தறிகி லார் நினது, கண்ணிய சரிதை செவிகொளார் கரத்திற் கடி மலர் நினக்கெனக் கொய்யார், விண்ணவர் வணங்குந் திருவு லாக் காணார் வீணரென் னுலகினிற் கண்டார், நண்ணின ரதனை யருள்செயா யழகி னயகி சாயக நயனி. 34

நயனநற் கயல்கள் கருணையி லாட நற்குழ விகளெனும் வெயிலாற், குயமரை விரிந்தின் னமுதினை யுகுக்கக் குமரரெம் போலியர் பருகத், தயவுட னடைவர் தாபமே தணிக்குந் தட வடி வாகிய தாயை, மெயிலுறு மிறைவ மேன்மையை யரு ளாய் மிளிர்பொரு ணகருறை யிறையே. 35

இறைவனுக் குரிய விருந்துய ரகற்றி யெழிற்குயத் தமு வலா லினிய, சிறுவரெங் களுக்குப் பசிப்பிணி யோடுஞ் சென்மவெம் பிணியறுத் தருள, நறைமலர்ப் பாலின் றீர்த்தமு மமைத்த நாயகி நாயினேற் கருளாய், சிறையளி பாடும் செழும் பொழிற் பொருள்வைச் சீர்நக ருறைந்தசெந் திருவே. 36

திருவினை யணைக்குந் திருநெடு மாலைத் திருக்கணைப் பறித்திடத் திகழ்த்தும், அருவனை யடைவ தெங்ஙனே யென வென் னகமிக வஞ்சிய தருளாய், வெருவலெ னினைநான் சோதியே னென்று விளம்புதல் வேண்டுமென் னையா, மரு வுறு பொருளை யடியவர்க் கீயு மாழையம் பதியின்மன் னவனே. 37

மன்னவர் வாழ்வும் வானவர் வாழ்வு மற்றவ ரடைந் திடும் வாழ்வும், தென்னவன் புதல்வி யாகிய தேனே தெய் வமே யென்மனத் தெளிவே, பின்னது வாக நின்பதப் பேறைப் பெரிதுநா னடைந்திட வருளாய், முன்னவ ரிடத்திற் சுட ரிழை வேட்ட முத்தமே சத்திய முதமே. 38

முதமெனத் தோன்றும் விருத்தியு முதிரு முழுதையு மெங்ஙனே யறியென், னிதமொழி மறந்திங் கின்புரு வடைய விடம்பொரு ளேவலி லியைந்தே, நிதநித மலைத றருங் கொலோ வருளாய் நித்திய முத்தசத் தியனே, மதர்விழிச் சௌந்த ரியவமை கொழுந மதகரி யுரித்தசே வகனே. 39

Koviloor Digital Library

சேவக னெனக்குத் திருவரம் வேண்டுஞ் செய்யதாள் பாவுதல் சிவமாய்ப், பாவக மாதல் பண்பதாய் நிலேத்தல் பண்ணொடு நின்புகழ் பாடல், மூவுரு வினேயும் வழிபட மொழிதல் முத்துவெண் ணகையரை மறத்தல், சாவினே நினேத்தலருளுவாய் பொருள்வைச் சௌந்தரி யம்மையே தவமே. 40

தவமிக வேண்டுந் தவிர்ந்திடா தடியர் தயவினே யடைந்திட வேண்டும், பவமகன் றிடவெற் கையனே யிதனேப் படியினி லருளினே யாயின், உவமனிங் கெவரெற் குறைத்திடாய் பொருள்வை யும்பனே யும்பர்கட் கரசே, நவநவ நீத னுருவனே வசிட்ட ஞெடிடு நாதனே நடனே. 41

நடநவில் சிறிய தண்டையந் தாளன் நாயினேப் பொருளென நயக்கும், கடமத கரியா னிளேயசிங் காரக் கதிர்வடிவேலவன் கருணேக், கடல்வடி வான ஞானமெய்க் குருவின் கண்ணொடு கண்ணனேந் தருளும், சுடரிழைத் தாயே யடியனுக் கருளாய் தோகையே வாகைமா லேயனே. 42

வேறு.

மால யனொடு மகஞ்சத மியற்றினன் மருவும்
கோல மாதங்க நகருறை கொண்டலே யடியேன்
நாலு மூன்றையு மடைதர நயந்தருள் புரிவாய்
நீல கண்டனே யண்டர்கள் நேடுநின் மலனே. 43

மலம்பெ ருகுட னுனென மதித்துமங் கையரான்
நலம்பெ றவலே நாயினே நாடியே யருள்வாய்
குலம்பெ றப்பெரும் புகைழயு மிமக்குன்றின் குமரீ
பொலம்பு ரிக்குறும் பொற்பெனும் பொற்பிஞ யகியே.()

பொற்ப மர்திரு மங்கையன் பொற்குவி யலினேப்
புற்ப தித்திடப் பொருள்வைமா நகர்புக விதனேப்
சிற்ப ரபிற வாதசெஞ் சேரியென் றிடலான்
நிற்ப ரவிடின் னென்குறை நிமலமெய் யறிவே. 45

Koviloor Digital Library

அறிவ தாகிமெய் யானந்த நித்தபூ ரணமா
யுறைவ தாகிய மெய்யினை யுழன்றிடு மெனக்கு
நிறைவ தாகிய மாத்தினி நின்மலை கொடுப்பின்
அறைவ தாருனை யழகினுக் கழகுசெய் யன்னே. 46

அன்னை யப்பனு யாருயிர் போற்றிட வமர்ந்தே
யுன்னை யுன்னிலர் மறைப்பொரு ளெனவுய ருளத்தே
என்ன செய்தனர் மானுட ரிம்பரி லிருந்து
பொன்ன கருறை புரமெரி கரியின்போர் வையனே. ()

போர்செ யுங்கணுங் கரங்களும் புகழ்பதம் பிறவும்
வார்செ யுமுலை சுரந்தருள் வழிதலும் வடமும்
ஏர்செ யுமறை மந்திர வுருவமா யிலங்கல்
ஓர்செ யுமன மொண்பத மடைதறிண் ணமதே. 48

திண்ணங் கண்ணிய சிவலிங்க வடிவமாய்த் திகழும்
புண்ணி யன்றிரு மறைமனுப் பொதிந்தவ னெனவே
எண்ணு மெய்யவ ரெய்திட லிருங்கயி லையதே
வண்ண மங்கவன் வழங்கிடல் வழியடி கொளவே. 49

கொள்ளு மெய்க்கர மலரினைக் குமரிநின் கழலின்
மெள்ள வைத்திட வன்புடன் மிளிர்தவம் வேறு
தள்ளு கோடியி லெளியனைத் தணந்திடா தருளும்
அள்ளு மெய்யரு ளுருவமே யழகுசெய் யனையே. 50

செய்ய செல்வத்தில் வித்தையே சிறந்தது வேதம்
ஐய மேலது வதனினு முருத்திரி யதினும்
துய்ய வைந்தெழுத் துயர்வதி னுயர்வினு முயர்வாம்
உய்யும் பொன்னக ரிறையவ னுருச்சிவ மனுவே. 51

சிவசி வையெனச் சிந்தனை புரிந்துசெந் நாவால்
நவாந வமுடன் கோடியெண் ணவின்றிட நளின
பவன்ப தஞ்சிறு பதமெனப் பெரும்பதம் பலிக்கு
மவமை யில்லருள் கொழித்திடு மழகியென் னுமையே.

உமைய வட்கரு ளும்பனே பொன்னக ருயிரே
எமையு யச்செயக் கலியினி லெதுவுள தியம்பா
யமையு மதுநன் னுமமே யலதுமே லதுவாய்க் [யாய்.
கமைத ரும்பெருங் கருணைசெய் கண்கண்மூன் றுடை

Koviloor Digital Library

மூன்றெ னுங்குணங் கண்மூலே புவனமு முகிழ்த்த
தேன்ற தும்பிய மொழியனுய் சிறுவரோ விருவர்
வான்றி கழ்ந்திட வடியனே வரவுசெய் திடினே
தோன்று மும்மையென் றொல்புக ழழகமை தொகையே.

தொகையி றந்தன வுயிர்களும் வினைகளுந் தொடர்பாம்
வகையி றந்தன போகமு மங்ஙனே வகுக்கின்
நகையி றந்தவிவ் வுலகநின் னுருவலா னுடேன்
பகையி றந்திடும் பொருள்வைகன் னகருறை பயனே. ()

பயமு றுத்திடும் பயோதரப் பயத்தினுற் பணிந்தேன்
நயமு றுத்தியென் றனையினி நடுங்கலென் றருளாய்
துயர றுத்திடத் திருவுருத் தாங்கியே துலங்கும்
கயலு றுத்திய கண்ணியே கவின்பெயர்த் தாயே. 56

பெயர்க ளாயிரம் பெற்றிக ளாயிரம் பிறங்கும்
செயல்க ளாயிரந் திருவுரு வாயிரஞ் சிறந்த
முயல்க ளாயிர மென்னினு முன்னவ நின்க்கு
அயல்கொ ளுந்திற னில்லேயி லாடகப் புரியாய். 57

ஆட கப்புரி நாற்புறம் காவிரி யருவி
யோட கத்திற மென்னவே யுன்றிருக் கருணே
நாட கத்தின ருட்புற நாடியே நடிக்கும்
வீட கத்தியன் பெறவருள் விமலேயே யெழிலே. 58

எழிலு ருக்கொடு தாருக வநத்திடை யிலங்கிக்
கழல்ப ணிந்திட முனிவருக் கருளிய கருணே
யழலு ருமந மெனதுபெற் றிடுமெனி னேயா
கழியு மென்வினே கனகநன் னகருறை கரும்பே. 59

கரும்பும் வேம்பெனக் கண்டுங்கற் றுண்டெனக் கழறும்
விரும்பு நின்மொழி யென்மொழி யொடுநனி விரவித்
துரும்பு லகென வெண்ணிநின் றுணேயடி புணேயா
யரும்பி நின்றிட லென்றுகொ லழகம்மை யறைநீ. 60

அறைவ தென்னினி யாடகப் பெருநக ரமர்வோ
யுறைவ துன்கழ லன்றியென் றனுக்கொன்று மிலேயான்
மறைவ குத்தது மங்ஙனே யாதலின் மலர்நீ
குறைவ தற்றிடும் படிக்கருள் குரவனே யருவே. 61

Koviloor Digital Library

அருவ மாகியு மருவுரு வாகியு மமரும்
உருவ நாயகி யும்பர்க ளுயகி யுலகின்
பருவ நாயகி பல்லுயிர் நாயகி பகர்வா
யொருவ றிவுரு வாயிட வுபாயமெற் குயர்வே. 62

வேறு.

உயர்வ திம்மநு டப்பிறப் போரின்வெந்
துயர றுத்திடத் துங்கமெய் யாதலின்
அயர்வ தென்னினி யாடக நாடுளாய்
செயன்மி கச்செய்கை சீர்த்திய தாகுமே. 63
சீர்த்தி வாய்ந்த செழும்புனற் காவிரிக்
கீர்த்தி யென்னக் கிளர்கரு ணைநதி
நேர்த்தி யாக நிதநிதம் பாய்த்திடின்
பூர்த்தி யாமகம் பொற்புறு மன்னையே. 64
அன்னை யென்ன வருள்வீர சேகரன்
என்னை முன்ன மெழிலறி வாக்கினன்
என்னி னுங்குறை யெய்திடு மேமவூர்
முன்ன வாமக முற்றிட மூழ்கிடே. 65
மூழ்கி நெற்றியி னீறினை மூடியே
தாழ்க வின்கலன் கண்மணி தாங்கியே
சூழ்க வேவலஞ் சுந்தரி மந்திர
மாழ்கு மால்பிற விப்பிணி மாயமே. 66
மாய வன்பிர மன்பணி மன்னனே
ஆய வன்பருக் கன்புடை யாடகத்
தூய நாயக தூங்கிட லென்றுதான்
வாயு மாமகம் வாங்கிடந் தோன்றியே. 67
தோன்றி டும்பொருள் சுந்தரி நீயலா
லான்ற கேள்வியி லன்னிய மில்லையால்
வான்று லங்கிய மாட நிறைதரும்
பூன்ற பொன்னகர்ப் புண்ணியர் புங்கமே. 68
புங்க வர்க்கெளி தோவுனைப் போற்றுத
லங்க வர்க்கரும் போக மமைதலான்

Koviloor Digital Library

இங்கெ னக்கரு ளீந்திடி னுமினேன்
துங்க பொன்னகர்த் தூயவ தூயனே. 69

தூய வன்புடைச் சுந்தரி தோடமின்
ரூய வன்பினி னின்பத மம்மையே
மேய நன்மந னென்றுகொன் மேன்மையா
யாயி யாகுவ னன்றறுந் துன்பமே. 70

துன்ப வின்பந் துதைந்து துதைந்துதோய்ந்
தன்ப தாக விடயத் தழுந்தியே
யென்ப தாயின னென்பதம் பெற்றிடின்
முன்ப பொன்னகர் முத்தி வடிவனே. 71

வடிவ மாகி வழங்கிட லென்முனே
துடியி டைச்சுக சுந்தரி யம்மையே
படியி லென்று பகர்ந்திட வேண்டினன்
அடிய னின்னடி யல்ல தறிந்திலேன். 72

இல்லை யுண்டோ டிருள்பக லென்றுசொல்
சொல்லை யுந்தவிர்ந் தின்ப சொரூபமாய்
நல்ல மெய்ப்பத நாடிட னுனென்றே
கல்லின் வில்லுக் கனக நகர்க்கணே. 73

கண்ணி னுஞ்செவி தன்னிற் கருத்தினும்
உண்ணி கழ்ந்தொளிர்ந் தாயெனி னும்பர்சேர்
விண்ணி னும்புகழ் சௌந்தர்ய வித்தகி
யெண்ணி லென்பத மென்ன வியம்புமே. 74

இயம்ப லென்னை யெளியடி நாயினேன்
பயம்பெ றச்சிறு பாலகன் பாடல்போல்
நயம்பெ றத்திரு நல்லருள் நண்ணினுன்
சுயம்பொ ருணகர்ச் சுந்தரன் றோழனே. 75

தோழ தாத தொகுசகத் தொன்முறை
யேழை மைந்தனுக் கெய்திட வில்லையால்
வாழை வைத்திடின் புத்திர வல்வழி
மாயை நன்னகர் மன்னிடு மம்மையே. 76

அம்மை மெய்யி லமர்ந்திட லானுனக்
கெம்மை யாள வருள்செய வின்பமே

Koviloor Digital Library

சும்மை யன்று சுவர்ண புரிதொழும்
மும்மை யாகிய மூவர் முதல்வனே. 77

முதற்சி ருட்டி யிலையென முற்றலாற்
சுதைச்சொ ரூபமெய்ச் சுந்தரி யம்மையே
விதச்ச கமுன்றன் மெய்யில் விவர்த்தமாம்
அதைத்தெ ரிவரிவ் வாண்டவர் கூட்டமே. 78

கூட்டங் கூட்டுகந் தையன் குலவிய
நாட்ட மோசக மென்னமெய் நாட்டிநின்
றேட்ட மேயறி யென்றனன் றேவர்சேர்
சேட்ட மாம்பிற வாச்சேரித் தேவனே. 79

தேவன் மெய்தொழச் சிக்கென முக்கிய
ஆவ வென்னம்மை யாரமு தத்தன
மீவ தென்று பருகி யிருந்துயான்
மூவ ரும்பணிந் தேத்திட முந்தவே. 80

முந்தி யேமுகுந் தன்பணி சிக்கலுட்
பந்த நீங்கிடப் பார்ப்பதி யோடுநீ
அந்தி யும்பக லுமமர்ந் தாயரு
ளெந்தை யேபொருள் வைப்பதி யேந்தலே. 81

ஏந்தி டுமெழின் மேனியு மின்னெழிற்
கூந்த லுங்கரு ணைக்கணுங் கொள்ளைகொள்
சாந்த முந்திகழ் சௌந்தர்ய நாயகி
போந்தி டின்மநம் போதமும் வேண்டுமோ. 82

வேறு.

வேண்டாமையெ னும்விழுச் செல்வம் விரும்பி னோர்க்குத்
தூண்டாவிளக் காகிவி ளங்கிடுந் தோன்ற லேயோ
ஆண்டாருகந் தைய னடியவ ரன்பி னனே
பூண்டேனிலை யன்பைப் பொருள்வைப் புரத்தின் வாழ்வே. 83

வாழ்வாவது மாயமெ னுந்திரு வாக்கி னனும்
தாழ்வேதிநங் கண்டு மநங்தெளி யாத தாழ்ந்தோன்
பேழ்வாய்திறந் தேதிரி பெற்றியென் பேசு கிற்பாய்
சூழ்வார்க்கருள் சுந்தர நாயகி தோமி லம்மே. 84

Koviloor Digital Library

அம்மாவிது வென்னபொய் மாய மறிந்திலே னியான்
சும்மாவிருந் தாற்சுகங் கைகண்டு தோற்ற வுந்தான்
வெம்மாயப்பெ ருவனத் தேயுழல் வீண ஞனேன்
பெம்மான்பொருள் வைப்பதி மேவிய பெற்றி யோனே. 85

பெற்றந்தனிற் பிஞ்ஞக ஞேடருள் பேய னேற்குச்
சுற்றித்திரி வஞ்சகன் றற்குமே தோற்றி வைப்பான்
முற்றுமுலைச் சுந்தர நாயகி முன்வந் தென்றன்
குற்றங்களை வேறு துணையிலை கொண்ட லன்னுய். 86

கொண்டல்வளர் சோலைகள் சூழ்ந்துகொண் டாடும் வண்டா
லண்டர்தெரிந் தாற்றிடப் பூசை யருளு கிற்கும்
பண்டெந்தைபொ.ருள்வைப் பதியுறை பாதி மாதோய்
கண்டென்று சுகித்திடு வேன்கழல் கண்கண் மூன்ருேய். 87

ஓயென்றிவ் வுலகுறும் வாழ்க்கை யுவர்ப்ப தென்ருே
நீயென்றருள் பாலிப்பை யோநிகழ் நீல மேனித்
தாயென்றிடுஞ் சுந்தர நாயகி சாற்று கிற்பாய்
வாயின்றிய நாயினன் நின்புகழ் வாழ்த்து வேனே. 88

வாழ்த்துமடி யார்க்கருள் வள்ளலே வண்பொ ருள்வைச்
சூழ்த்தும்பெரி யோர்புகழ் சுந்தரி தோழ னேயான்
பாழ்த்தும்பிற விப்பிணி வாட்டிடப் பங்க முற்றேன்
தாழ்த்துந்தலை நின்றிருத் தாளினிற் ருழ வையே. 89

வையம்புகழ் சுந்தர நாயகி வாழ்வெ ணக்கே
செய்யென்வினை தீர்த்திடு சிற்சொரூ பத்தின் றேறல்
பொய்யென்மன ரூபகு டிகொண்டு பேணு மன்பால்
பையனென நீமற வேலினிப் பண்ப தாயே. 90

பண்பும்பொரு ளும்மெனப் பார்ப்பதி பற்றி நிற்குந்
தண்புண்ணிய மூர்த்தி பொருள்வையிற் ருணு வேயென்
புண்பண்ணிடு முள்ள முனக்கினிப் புங்க மாகிப்
பண்பன்னிட நாவையு மெந்தை பணித்தி டாயே. 91

பணிவேண்டிச்சிங் காரமெய்த் தேசிகன் பாலு ரைத்த
வணிபோலினி யெங்கள் வயமிக வாயினு மென்
றெணிநாயின னின்றும கிழ்ந்தன னென்னை யீன்ற
மணியேகுண சுந்தர நாயகி மாசி லாளே. 92

Koviloor Digital Library

வேறு.

மாச தின்றிய மன்னவ போற்றிமெய்ம் மாதவர் மிகப் போற்றுந், தேசி கனுகந் தையனற் றிருவடி திநந்திநம் பணிந்தேத்திப், பூசை செய்திடு மாண்டவன் பொற்பதம் புகழ்வழி யடியேனுன், ஆச தின்றிய பதமெனக் கருள்செய்வா யம்பிகா பதிபோற்றி. 93

வேறு.

பதியுந்திரு வும்படர் மாதரு பண்பென் யாவும்
விதியின்பய னென்று நினைந்தருள் வேண்டு கின்றேன்
கதியெற்கிலை வேறுக ருணைசெய் காவெண்ன் னம்மே
துதையும்மலர்ச் சேவடி போற்றி துகளில் தாயே. 94

வேறு.

தாயு மானவ போற்றிமெய்த் தயாபரத் தாணுவே மிகப் போற்றி, நேய மானவ போற்றிநின் மலையுடன் நிதிதுனும் பதியூடே, தோயும் வானவ போற்றியெந் தோன்றலே துகளிலாய் மிகப்போற்றி, நாயி னேற்கருள் செய்திடும் நாதனே நளினமென் மலர்போற்றி. 95

வேறு.

மலரடி போற்றி செம்பொன் வைத்தமா நகரில் வாழும், குலதெய்வம் போற்றி மெய்யைக் குலவல்செய் யம்மை போற்றி, புலர்வதம் முன்ன முன்னைப் பணிந்திடப் பணிப்பாய் போற்றி, நலமுறு சுந்த ரஞ்சேர் நாயகி போற்றி போற்றி. 96

வேறு.

போற்றியுன் வாழ்வென் வாழ்வாய்ப் பொருந்திட வைக்கும் நாத, போற்றிமெய்த் தொண்டர் போற்றும் பொருள்வைமா நகரின் வாழ்வே, போற்றிநல் வெண்ணை யப்ப னுருவமாய்ப் பொலியுந் தேவ, போற்றியென் றனையு மெய்யாய்ப் புகழ்ந்திட வைத்த கோவே. 97

வேறு.

கோவே போற்றி யுயிரில்வளர் கொழுந்தே போற்றி நாற்றிசையு, மூவா திருக்கு முதல்வர்புகழ் முதலே போற்றி யான் புகழும், நாவே போற்றி சுந்தரநா யகியே போற்றி நளின

Koviloor Digital Library

பதத், தேவீ போற்றி குருவடிவாய்த் திகழ்வாய் போற்றி மிகப் போற்றி. 98

வேறு.

போற்றி போற்றியொண் காள கண்டனே புண்ணி யாபுகழ்க் கண்ணி யாநிதம், போற்றி போற்றிவெண் ணிலவு சூடிய புங்க வாவருட் டுங்க மெய்யனே, போற்றி போற்றிகங் காத ராநிதம் புரமெ ரித்தசீர்ப் போத வேதனே, போற்றி போற்றியம் பிகையின் பாகனே பொருள்வை மாநக ருறையு மேகனே. 99

வேறு.

ஏகிடா தெங்க ளிடமிருந் தருளி யெங்களுக் கருளுவாய் போற்றி, மோகமே துடைத்துச் சோகமே யறுத்து முத்தியீ யம்மையே போற்றி, வேகமே யொழித்துச் சாந்தியே மேவ விரும்பிய வன்னையே போற்றி, பாகுலா மொழிமெய்ப் பண்ணவி பொருள்வைப் பதியுறை தேவியே போற்றி. 100

வேறு.

போற்றியென் னுயிர்க்குயி ராகிய பொருளே புகழ் பொருள் வைப்புரி புரியென வுறுவோய், போற்றிமெய் யுபநிடப் பொருளுறும் பொருளே புண்ணிய முனிவர்கள் புகழ்ந் திடு மிறையே, போற்றிநற் சுவர்ண புரீசநற் புனிதா போர் செய்சிங் காரனின் றுதையெந் தந்தாய், போற்றிநஞ் சித்திவி நாயகற் பயந்த பூரண னேயரு ளாரண போற்றி. 101

வேறு.

போற்றியே யுகந்த தேவீ புண்ணிய வதியே போற்றி
போற்றிவீ ரேசற் பெற்ற பொருள்வைவா ழம்மே போற்றி
போற்றியிந் நகரில் வாழ்வோர்க் கருள்செயும் புகழே போற்றி
போற்றியென் னம்மே போற்றி போதமெய்நிறைவேபோற்றி.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ சுவர்ணபுரீசுரர் சௌந்தரிய நாயகி யந்தாதி

முற்றும்.

Koviloor Digital Library

A. No. 4482
D 2111 (பின்)

உ
சிவமயம்.
ஓம் மகா கணபதயே நமஃ

ஸ்ரீ செல்வ விநாயகர்
செம்பொன்மாலை.

மங்கலம்

கல்வி யும்பெருஞ் செல்வ முங்கழன் மலர்பரவும்
ஒல்வ ணக்கினர்க் கருள்வனை யுகந்ததே சிகற்கு
நல்வ ளனுறப் பொன்றரு நாதனைப் பாடச்
செல்வ மாமுகன் சேவடி சென்னியிற் சேர்ப்பாம்.

திரிசக மதனி லுவமைநின் றனக்குத் தேசிகோத் தம விலை யுளதேல், பரிசம்பொற் றகைமை யளித்திடுந் தனது பான்மையை யளித்திடா துனது, வரிசையை யருள வீரமா தவனுய் வந்தனை யெனின்வழங் கிடலோ, தெரிசனம் புரிவர்க் கிகபர சுகத்தைச் சேர்ந்திடும் செல்வமாமுகனே. 1

என்னதா னுரைத்தும் பயன்கொலென் னையா வேழையர் சுகம்சுக மெனவே, பன்னலென் றனைவிட் டகன்றிலை பாவி பழவினை யழகினை யுடையேன், உன்னலுன் றனையா னெருமநத் தோடு முருகியே யென்றுதா னருளாய், கன்னறுஞ் செநெலுங் நலந்திடும் பொருள்வைக் கடிநகர்ச் செல்வமா முகனே. 2

திருசிய மறந்து சித்கமு மிறந்து சிற்சுக வாரியிற் காந்து, ஒருசிவ மாகித் துயரெலாந் துறந்து வொப்பற நிற்குநா ளுளதோ, வருசினங் கொளும்வண் டண்டர்கள் பரவ மலர்தொறு நறவினை யருந்தித், திரிசிரி சோலைப் பொருள்வையம் பதிவாழ் செஞ்சுடர்ச் செல்வமா முகனே. 3

Koviloor Digital Library

காற்றினி லலையுஞ் சருகென வினையின் காற்கொடு காயமுந் திரிய, கூற்றினை யுதைக்குந் தாளனார் குமர குமரவேள் முன்பனே குருவே, எற்றுடை யிறைவ வென்றுயான் றுதித்து விம்பரில் வாழுமா றருளாய், நாற்றிசை பரவும் பொருள்வைமா நகர்வாழ் நாடருஞ் செல்வமா முகனே. 4

நீமநஞ் சிறிது மென்மொழி செவிகொள் செறிவிலை செறியுமா றருளால், காமனை யெரித்த கண்ணுத லீன்ற கரிமுக கடனின தலவோ, காமனைப் பழிக்கு மங்கையர் வயலிற் கழைமணி கலந்தநெல் வாரிப், பூமனைக் கேகும் வளனுடைப் பொருள்வைப் பொன்னகர்ச் செல்வமா முகனே. 5

நூலினி லுழன்று நூலிடை யுழன்று நூனெறி நுழைதரா நுணியன், பாலக னெனினு நினதடி பரவும் பான்மையன் மேன்மைய னலவோ, காலனுங் கலங்கு மாடவர்க் கவாக்கமழ்தருங் கற்பினர் வாழும், கோலமெய் யுடைய பொருள்வையம் பதிவாழ் கொண்டலே செல்வாமா முகனே. 6

எங்குகண் டிடினுஞ் சிவமய மாகி யெழிற்சம திட்டியை யடைந்தே, தங்கிடக் கிருபை புரிதரல் வேண்டுந் தந்தியுந் தந்தியுந் தளைந்து, பங்கமில் குடஜ வநந்திரி போதும் பரமநிற் பூசைசெய் பொருள்வைத், துங்கமெய் யிறைவ வருடருங் குரவ துகளருஞ் செல்வமா முகனே. 7

உவமையற் றழிவற்றொருகிரி யையுமற் றுயர்ந்தநிட் களகுண ரகித, அவமயன் மாயை யற்றமை யானே யவிழ்ந்தெலா விகற்பமு மவிர்ந்தே, சிவமயத் தூய போதநின் றனையே செவ்வனே யகமெனச் செறிவேன், நவநவப் பொருள்வை நகர்வளர் துரையே நாயக செல்வமா முகனே. 8

எனதறி யாமை யியைபுறப் பெற்றே யிருங்கரு மச்சழக் குழன்று, உனதருள் கொடுமன் னுறப்பிரிந் தறிந்திங் குய்யுமா வாழ்த்தின னருளாய், தனதனும் விரும்புந் தனநிறை பொருள்வைத் தாயர்கள் கற்பினில் வடமீன், கனதையி லுலவுங் கடிநகர் வாழுங் கருணைசெய் செல்வமா முகனே. 9

Koviloor Digital Library

மாயையின் வயத்திற் றுயின்றிடை யிடையின் மன்னு றுங் கனவள விலவாய்ப், பேயகத் தெழுந்த பெற்றியை நினது பெருமொழி கெடுத்ததென் வியப்போ, நாயகன் சுவர்ண புரிப் பெரு மானு நலமிகு மழகியுங் கூடித், தூயவெற் கருளத் தா வருங் குமர துன்பமில் செல்வமா முகனே. 10

பகுதியின் படிக ளாகிய காயப் பண்பினிற் படிறனே னகமாம், விகுதிகள் புரிந்து வியப்பொடுந் திரிந்து வீணினி னுளெலாந் துலைத்தேன், தகுதியென் றரியப் பகடுகைபகடு தளைத்துச்செய் வளர்த்துமெய்ப் பொருள்வைத், தொகுதியில் வளருந் தோமிலா முதல்வ சுகவுருச் செல்வமா முகனே. 11

உண்மையின் விடய மசுத்தந்துன் பநித்த முளந்தனி லிதையுணர்ந் திருந்தும், வெண்மையே யன்றே விரும்புறல் வினைவை வேரொடுங் களைந்தருள் புரிவாய், தண்மையாற் பெரிய சந்திர முகிக டங்கலிற் பொங்குவெங் கனலி, லிங்கி தப் பொருள்வை நகரிலங் கிறைவ வென்னுயிர்ச் செல்வமா முகனே. 12

சாத்திர சாலந் தணந்துபுன் ளொழிலுஞ் சாடியே பால ரைப் போலும், கோத்திர முதல வினைவனை யாமற் கோதிலாப் பூன்றநின் பதத்தில், நேத்திரந் திறந்து மநனி யிறந்து நித் திய வாழ்விலென் றிருப்பேன், வேத்திரங் கரங்கொள் வேல வன் றமைய வியன்றருஞ் செல்வமா முகனே. 13

கண்ணினு லெதையுங் காணில னுகிக் காதினு லெதை யுங்கேட் டிலனுய்த், திண்ணமா யுளத்தி னினைத்தில னுகித் திகழ்தருங் குருடொடு செவிடு, வண்ணமாய்த் திரிந்து நின்பதத் திருந்து வாழவென் றனக்கருள் புரிவா, யண்ணலே யாசே யானைமா முகனே யரும்பெருஞ் செல்வமா முகனே.

இகழ்கல னுகி யொன்றையு மினிதா யிருங்காங் கவர்ந் துள மகிழ்ந்து, புகழ்கல னுகிப் பூரண வறிவிற் புணர்ந்ததன் மையினுள மிகவே, மகிழ்வுறு மாரக் குழம்பினிற் குளிர்ந்து மதகய மெனத்திரி வேனு,அகழ்வுறு மிடத்தி லாடக மெடுக்கு மரும்பதிச் செல்வமா முகனே. 15

Koviloor Digital Library

மங்கையம் பெருமான் பொருளினைப் புதைத்து வைத்திடு மகிமையே மலராள், இங்குறு பூசை புரிந்தசெந் திறனே விந் திர னாதியர் வணங்கும், பொங்குறு தவத்தர் வாழ்தரப் பெற் றே போற்றுத லுபநிடப் பொருளைச், செங்கைமத் தகம்வைத் தாண்டமெய்க் குரவ தேவனே செல்வமா முகனே. 16

வசிட்டமா முனிவன் வாழ்ந்துமெய்த் தவத்தை வளர்த்தி டும் வண்மையோ மாயோன், சுசிட்டமாய்த் துலங்கி யருள் செயுந் தொடர்போ தொடர்ந்துவா சிட்டமுங் கீதை, விசிட்டர் கள் பரவும் பொருள்வைமா நகர்வாழ் வேழமா முகவசிங் காரச், செசெட்டைமா மயிலின் றுணைவனே மணங்கொள் சித்தியின் செல்வமா முகனே. 17

சித்திமா முகனென் பெயரொடு மமர்ந்தாய் தேசிகர் மாசி ல்பூ சையினில், உத்தம மாழை யுகந்ததே சிகர்பா லொள்ளிய சந்தபி டேக, சித்தியி னிமித்தங் கொடுத்தலி னடிக்குஞ் செல் வமா முகனெனச் சிறந்தாய், முத்தியை யடியர்க் குதவிடும் பரம மோதகச் செல்வமா முகனே. 18

சூரியன் குளிர்ந்து தோற்றினு நிலவு சூடுடன் றுலங்கினு மெரிதான், ஓரியல் கீழி லொளிரினுங் ககனத் துறினுமே விழுதுடுக் கணங்கள், நேரியல் மாறி நிகழினு மாயை நிகழ்த் திய சாலமீ தென்னுப், பூரிய நிலையில் மாறிடா தருள்வாய் பூரணச் செல்வமா முகனே. 19

நாசியி லமைத்த நோக்கொடு மெவையு நாடிடா நன் னிலை மையினில், பேசிடா தரிய தத்துவத் தழுந்திப் பெருகிய காவிரிக் கரையி, லேசிட வெவரு மிருந்துவாழ்ந் திடுத லென் றுகொ லிமையவர் புகழ, வேசிகள் மேன கையினைப் பழிக் கும் வியனகர்ச் செல்வமா முகனே. 20

ஞாலமென் பாயிற் குடங்கைமெல் லணையாய் நாடிய விர தியைக் கூடிக், கோலமா யிருத்த லென்றுகொல் லறியேன் கொடுஞ்செயல் செயமிக விழைந்தேன், ஆலமே யமுத மாக் கிய பரம னுடகப் புரியில்வா ழிறைவன், நீலமெய் யழகி யணைத்தருள் குமர நின்மலச் செல்வமா முகனே. 21

Koviloor Digital Library

ஒருவரு மில்லாக் காவிரிக் கரையி லுயர்கோடி வீட்டில் வெண் மணலில், இருவரு மொருவ ராகியே யிருமை யெண்ணிடா தருஞ்சுகக் கண்ணீர், மருவுற மகிழ்ந்து மலரவன் வாழ்வும் மண்ணென வெண்ணுமா வெண்ணாய், தருவநத் துறையும் வீரசே கரனுந் தண்ணருட் செல்வமா முகனே. 22

சீருலா முகந்த தேசிகன் வீர பத்திர தேவன்சிங் காரக், காருலாங் கருணை நாதன்கம் பீரக் கவின்முத்தி நாதன்சட் டேசப், பேருலா மிறைவன் முதலவர் போற்றப் பேரருள் சுரந்தநீ யெனக்கு,நேருலாம் பதத்தைக் காட்டிடா தென்னே நேரிலாச் செல்வமா முகனே. 23

உண்முகத் தமுதம் பருகியே காத்தி லூற்றிடு முணவை யுட் கொண்டே, தண்முக மாகித் தாயென நினைந்து சந்ததந் தெருவிலே ஜடனாய், விண்முகத் தவர்க டுதிசெய மகிழ்ந்து வீற்றிருந் தருளுநா ளுளதோ, கண்முகத் தெணியே கந்தனொ டாடிக் கலகஞ்செய் செல்வமா முகனே. 24

நீடிய பரம சிவத்தினி னிலைத்து நிசசுக ரசமிக மாந்தி, வீடிய லெதுவு முணர்ந்தில னாகி வெளியினிற் பாடியுஞ் சில பா, லாடியுங் கிடந்து நிட்டையே புரிந்து வமர்ந்திட வருடனைப் புரிவாய், வாடிடா வலபை வளமண வாள மகிழ்வுறுஞ் செல்வமா முகனே. 25

நின்றிரு வருளிற் பரசுகக் கடலி னிகழ்தரு பேனமுன் னுலகம், என்றனி யுருவ மானபின் றேக்க வெங்குயான் செலல்செயல் கோட, லின்றெனை வீட லிகழ்புக ழெங்கே யேகிய தறிகிலே னெனினும், நன்றதி னிலைக்க வருடெருள் வடிவ நாதனே செல்வமா முகனே. 26

மாயையா கியதோ ரெழிலியிவ் வுலக மழைத்துளி தெளிக்கமற் றறிவாய்ச், சேயையொத் திலங்கு மென்னையென் செயுமோ செயமப செயமிறை யிலையால், தூயையாம் நினது திருவடி மறவேன் றுதிக்கையாய் துதிக்கையெற் கருள்வாய், நாயையும் பொருளென் றுண்டநா யகனே நம்பனே செல்வமா முகனே. 27

Koviloor Digital Library

வாக்கொடு காய மாநத மாக வயங்கற மறமெனக் கருமங், தேக்குறு முலகின் மூன்றினுங் கரியாய்த் திகழுமென் றனைச்செய லென்னே, போக்கொடு வரவ தின்றியே பொலியும் பொலம்புரி யிறைவர்பெற் றெடுத்த, நாக்கினில் வளருந் தெய்வமே யெனது நாயக செல்வமா முகனே. 28

புயங்களோர் நான்கும் முக்கணுங் கயத்தின் புழைமுகச் செக்கர்மா மேனி, நயங்கமழ் பாச வங்குசத் தோடு நாடிய மாயையி னோடும், பயங்கழி தாவிற் போற்றுத லென்றோ பகலிராத் தெரிந்திடா வண்ணம், சுயங்கதிர்த் தொளிருஞ் சுவர்ணலிங் கேசர் சுதனெனுஞ் செல்மா முகனே. 29

பிரமநா யகனே பெருஞ்சுரா சுரர்கள் பேசுறும் பூசனை புரியும், வரமுறுஞ் சித்தி புத்தியா மனைகள் மருவிட விருபுடை மகிழ்வோ, யருமையா மன்பிற் குருகிடு மிறைவ வம்பிகை நந்தன வெளியே, னிருமையைப் பிரிக்கு மிறைவனே மறையி னிரும்பொருட் செல்வமா முகனே. 30

தன்னியன் மிகவுந் தன்னிய ஞனே தமியனேன் பிறவியைத் தவிர்ப்ப, நின்னுடை யருளை யருளலா லின்றே நிமலமா மெடுத்தவிப் பிறப்பும், கன்னலின் றாளங் கரிதருந் தாளங் கடைகளிற் கடைச்சியர் கொடுபோய்ச், செங்நெலுக் கீயும் வளநக ரிறைவ சீருடைச் செல்வமா முகனே. 31

தயிரொடு மதுநெய் கலந்ததெள் ளமுதுந் தரும்பலாக் கதலிமாங் கனியும், பயறொடு திலத்தி னுருண்டைமோ தகங்கள் பக்குவ மாகவே கொடுத்து, உயும்வகை பூசை செயுமன்பர் தமக்கங். கொண்பத முதவிடு முரவோய், கயமுக வடியர் தயைமுக வெனது கணிமுகச் செல்வமா முகனே, 32

தாயுநீ தந்தை தமையனீ தமக்கை தம்பியும் தங்கையும் நீயே, தூயநீ மைந்தன் பந்துவு மாகித் துலங்குவை துதிகுல தெய்வம், நீயலா லெனக்குப் பிறிதிலை யதனு னின்பரம் யானருணிமலா, காயமே யினிவந் துறுவண மருடி கவின்மலர்ச் செல்வமா முகனே. 33

Koviloor Digital Library

நனவொடு கனவு துயில்களிற் புரியும் நல்வினை தீவினை நினக்கே, யினமுடன் றந்தே னிடர்கெழு பாவ மிரிந்திட நினதெழிற் பதுமக், கனகபா துகையைக் கழுவிய தீர்த்தங் களிப்புடன் கொண்டன னடியேன், தநமக டவத்தைத்தடை யற நடத்துந் தண்ணருட் செல்வமா முகனே. 34

ஒன்றதா யுலக மனைத்துமாய் நின்று யொள்ளொளி யிறைவனே மறையோ, யென்றபின் னிருமை பேசுதல் பழிப்பே யுயர்தவ மின்றெனல் வெளியே, சென்றதை நினையா திருந்தெழில் வரவைச் சிறிதெண நிகழ்வினை மறந்து, வென்றவர்க் கருளும் விமலனே வெட்ட வெளியெனுஞ் செல்வமா முகனே. 35

இவன்மிகச் சபலன் குழவியா யிருந்து மிருந்தயித் தியரையே யழிப்பன், நவவினி யெதனைச் செய்வனோ வந்தோ நானறிந் திலன்முநி வரனே, உவமையி லுமையு முரைத்திட சிரித்தங் குமையமை குறங்கின்மீ திவரும், சிவவடி வான செல்வர்வாழ்த் திறைவ செழுமறைச் செல்வமா முகனே. 36

கணங்களுக் கிறைவ கேட்டவே ரம்ப கபிலமங் களநிதி கருணேய், குணங்களுக் கிறைவ வரதனே துண்டிக் குருபர சிவசுத வுமையீ, மணங்களுக் கிறைவ வென்றுயான் வழுத்தி மகிழுத லென்றுகொல் லறியேன், பிணங்களுக் கிறைவ னுகியே யெய்த்தேன் பேருருச் செல்வமா முகனே. 37

கயமுக வரிட்ட மகோதர கருணைக் கடல்சித்தி புத்திநாயகனே, குயமுகங் குகிய நலமென மருண்டு குழிவிழு மடியனுக் கருள்வாய், வெயில்பட மடவர் மேனிலம் புகுந்தும் விண்ணெழுஞ் சோலையாற் றடையுண், டொயிலுடன் றிரும்பும் வளனுறு பொருள்வை யொண்ணகர்ச் செல்வமா முகனே. 38

பற்றில தாகித் தனித்தொளிர் மநம்போற் பதுமநா யகனும்பண் ணவர்சூழ், பொற்றிரட் கதிபக் குலிசனுஞ் சுகத்தைப் பொருந்துரு றென்னவும் பொருளிற், பற்றினை விடுக்கா தறிவிலார் போலப் பந்தமே யுறுதலென் னருளாய், வெற்றிவே லழகன் மெச்சுறக் கனிகொள் வேழமே செல்வமா முகனே. 39

Koviloor Digital Library

மநந்தனி கறந்தாற் பற்பவீ ரெழுந்த மாருத மெழுகட லெழலும், இனுந்திந கார்க ளீரறு பெயர்க ளெரிக்கினு மெரி சொரிந் திடினும், துனுந்துயர் திலத்தின் றுணையுமே யிலையாற் றுண்டிநா யகவதை யருள்வாய், தனந்தனித் திரியு மன்பர்கள் போற்றுந் தாணுவே செல்வமா முகனே. 40

ஆசையின் மநத்தி னருந்தண்மை நிறைவொ டழகெனு மூன்றினுக் குவமை, பேசுறு நிலவு பாற்கடற் றிருவின் பெட்புறு முகமனு காதேல், மாசறு நிலைமை யடையுமா றருளாய் மன்னன்மா முசுகுந்தன் போற்ற, வேசில்சுந் தரனு யிருந்த வெம்பெரும வின்னெழிற் செல்வமா முகனே. 41

மநந்தனை யொடுக்கல் தெய்வமா மருந்தா மற்றதன் பயன்பிறப் பறுதல், வநந்தனி லிருந்த மெய்த்தவ ருரைத்தார் வழங்கதை யெற்குவைத் தியனே, கனந்தநங் காட்டிக் காசுகள் பேசுங் கணிகைய ருருப்பசி நிகர்க்கும், வகந்தனிற் குடச வசித்தருள் பவனே வள்ளலே செல்வமா முகனே. 42

கோடிமெய்க் கணக்கி லாண் டமா வலியுங் குணமிகு பகீரத விறையும், நாடியவ் வுலகை வெறுத்தன ரென்று ஞாயினே னச்சுத னலனே, வாடிப விடையை மலைநகைத் தெனைக் கொள் வம்மர்கள் றுன்புறல் காணேன், ரூடிம வடிவே மங்கைய நமரு மருநகர்ச் செல்வமா முகனே. 43

ஆயுளோ வற்ப மையகோ தொழில்க ளளவிலை யளவிலையவற்றில், நோயுக ளுறவே வியமநத் தோடும் நொண்டியக் காமென வலைந்தேன், பேயுட னுடும் பெருஞ்சதா சிவமாம் பிரமநன் னிலைபெற வருளாய், நாயினுங் கடைய நாயினுக் கையா நாதனே செல்வமா முகனே. 44

, வாயொரு கோடி பேசிடும் வடித்து வணங்கிலா மநமுலகெல்லாம், போயலைந் தொன்றும் பொருந்திடா வருந்திப் புகுந்திடு மடக்குமா றருளாய், சேயொடுந் திரித னங்கைமார் தேவி சிறியசிங் காரனே டுலவ, லாயொளிர் பொருள்வை வளநகர்க் காசே யாதனச் செல்வமா முகனே. 45

Koviloor Digital Library

சந்தன மபிடே கித்திட வேண்டிச் சதுர்முக னெக்கு மெய்ஞ் ஞாந, வந்தனி யுருவ னுகந்ததே சிக்ன்பா லளித்த பொற் காசைசீ யமைபால், வந்தநம் புரிந்து வாங்கினை கொல் லோ வழங்கிடா தெடுத்தவந் தனேயோ, கந்தனுக் குரிய காரது தானே கழறுதி செல்வமா முகனே. 46

நினைபவர் தமக்கு நின்மல பதத்தை நிகரற னொடியினி லுதவும், அனையுயர் கருணை யுருவனே யெனினு மடியனை நினைந்திடா தெனையோ, வினைபல மலவே வெங்குண மிகவோ வேட்கையே வடிவனே வெய்யோன், றனைக்குளிர் மநனே வருளுதி தயையாற் றற்பரா செல்வமா முகனே. 47

காலமோ கடிது கழிந்துகொண் டேகக் கடையனேன் கழல்கரு தாமல், ஞாலமே லுழன்று நாத்தடிப் பேற நவின்று கொண் டிருந்திட னலனே, ஆலமே யமுத மாக்கிய சுவர்ண வருநகர்க் கிறைவனு மழகார், கோலமா மாதும் பெற்றருள் குமர செல்வமா முகனே. 48

புன்மண நிறைந்த வவயவ மதனைப் புனுகுசவ் வாதென நினைந்து, கன்மமே புரியு மேழையைக் காத்தல் கடனின தல் லவோ கருணை, நன்மண வடிவ நாப்புறம் விருத்த நல்லகா விரி யரு விகள்பாய், தன்மநன் னகர தனிச்சுடர் விளக்கே தாணுவே செல்வமா முகனே. 49

நாரியை யுடைய சீரனே போக நலமெலா நமக்கென நினைவன், காரிகை விடுத்து வாதனை விடுத்த கல்விதேர் முநி வரன் கருதான், வீரிய மிகுக்கி னேஜசாம் புகழும் விளங்கிடு களங்கமில் பதமாம், ஒரியல் பருளி னுய்யலா மருள்செய் யொண்புகழ்ச் செல்வமா முகனே. 50

மன்னனு யிருந்தென் மங்கைய ரறுவர் மலரடி வருடி யென் மாமேற், சொன்னபீ டிகையில் வந்திடி னென்னே துறக்கவிந் திரனுறி னென்னே, இன்னலே யில்லாப் பதம டைந் தல்லா லின்பமெய் துறவிலை யருளாய், கன்னனே யென்னக் கொடையர்வாழ் பொருள்வைக் கடவுளே செல் வமா முகனே. 51

Koviloor Digital Library

நிட்டையி லிருந்து நிகிலமு மறந்து நிகரிலாச் சுகக்கட லழுந்தின், மட்டவித் துயர மியாவுமே பயனும் பாடமாத் திரத் தினிற் பயனில், துட்டர்கள் வரினுந் தொடர்பினு லறத்தைத் தொடர்ந்திட நடந்திடும் பெரிய, சிட்டர்வாழ் பொருள்வை வள நக ரிறைவ தொந்திமெய்ச் செல்வமா முகனே. 52

வேதமோ தியருஞ் சாத்திரந் தெரிந்த விமலரும் விபுதரு மிருப்பக்,கோததே வடிவ மாகிய வெனையுங் கொள்ளுத லருள் செய லெங்ஙனே, நாதனுந் தாமு நடத்திய தவத்தால் நகரெலா மருந்ததி வசிட்டர், ஆதல்செய் வடமீன் வளர்தரு நகர வம லனே செல்வமா முகனே. 53

சிவவடி வலது செகமிலை யிருப்பின் செப்பலெப் படி யுண்மை விடுத்திங், கவமதே யறிவை யன்றியொன் றதனை யையகோ மநத்தினி னினைத்தல், தவவடி வெடுத்துந் தமி யனே னலைதல் சந்நிதித் திருவுள மறியும், உவமனே யில்லா வறத்தின ருறையு மூருளாய் செல்வமா முகனே. 54

அடையவேண் டியதை யடைந்தின்ப மாகி யமர்ந்திடா தையகோ பறவை, கடையதே யாய தருவிலங் கெனவே கழித் திடின் வேசரி யென்பர், முடையுடை யாக்கை யகமென லொழித்து முத்தியை மேவுநா ளுளதோ, விடையினில் வரு மெம் முயிர்த்துணை யாய வேதமார் செல்வமா முகனே. 55

நிராசையை யலது தெய்வமு முண்டோ நிகழ்த்துதி யென்பதை யுணர்ந்தும், துராசையின் மூழ்கித் துயர்க்கட லாழ் ந்து துஞ்சுத லழகுகொல் லுரையாய், வராசலன் புதல்வி சௌந்தர்ய வல்லி வயிறுதோய் வாரண னனனே, பராசரன் புதல்வற் பாரத மெழுதும் பண்ணவ செல்வமா முகனே. 56

உளநினை வில்லாப் பரபதத் தநிச மொன்றியே துயரெலா மொழித்துத்,தளர்வற விருத்த லென்றுகொல் லறியேன் றயவு செய் தருளிடல் வேண்டும், களவுறு மநத்தன் கயவரி னுறவன் கண்ணிலாக் கசடுறு மேழை, யளவறு பாவி யடியனே னநக வறிவுருச் செல்வமா முகனே. 57

Koviloor Digital Library

கருதிய கருத்தை யொடுக்கியே விகற்பங் கழன்றதின் சமாதியை யடைந்தே, வருதிரை யோய்ந்த கடலென விருக்கும் வணமையென் மீதிரு கால்கள், ஒருதரு வென்னு வுறை விடஞ் செயுமா வும்பவெற் கருளுநா ளுளதோ, ஒருதிரு மொழியிற் பிறவியை யொழிக்கு முயர்குருச் செல்வமா முகனே. 58

சகந்தனிற் பிறந்த பிறவியை யோரின் சண்முகன் றமை யநீள் கடலி, னுகந்திரு கரையின் மணலினு மதிக முனைத்துதி யிப்பிற வியினும், அகந்தனிக் கரியென் றறிந்திடா தொழியி னையகோ வுய்வதெப் படியோ, உகந்தசற் குருவின் வழியடி நாயனுனியருள் செல்வமா முகனே. 59

பயந்துமெய் மறந்து படியினி லுழன்று படிறுடைத் தேகமே யகமாய், நயந்துகொண் டாடும் புலையனே னின்று ணுடுவதென் றுகொல் லறியேன், வியந்துசு வர்ணேசர் மெச்சிட வெளிதின் மிளிருஞ்சங் கற்பத்தா லுலகைப், பயந்தவன் பயந்த பண்ணவ கரியின் படிவனே செல்வமா முகனே. 60

எதனையா னென்ன விச்சட மாகி யெனதென விருப்பதுள் ளெந்தாய், வதநமெய்க் கரியி னுருவனே கரியாய் வயங்குத லென்றுகொல் லருளாய், சுதனென விருந்து மூவரை யேவுஞ் சுதந்தர சொல்லணு வாற்றல், மதனனைப் பொடித்த மதனனே விதன மாற்றிடுஞ் செல்வமா முகனே. 61

விடயவா நந்த மற்பமா மதனை விரும்பியே துயருறன் மலையாம், தடையிலாப் பிரம வாநந்த முளத்திற் றங்கியு மங்கின னிதிமேற், படர்விழி யிலர்க ளர்படர்ந்தென வந்தோ பாவியை யாளுத லென்றோ, நடனநா யகன்றன் புதல்வனே நளின நற்பதச் செல்வமா முகனே. 62

தன்னுளே விகற்பித் தெழுந்ததோர் விகற்பந் தவிர்ந்திடிற் சகமிலை யறிவே, மன்னுறு மநமு மதன்மய மாகி மலர்ந்திடு மகிழ்ச்சியும் பெருகும், அன்னதே யியற்கை யென்னினுஞ் செயற்கை யஞர்க்குழு வண்மிய தென்னே, அன்னையே முன்னம் பாற்கொடென் றழுகு மரும்பெருஞ் செல்வமா முகனே.

Koviloor Digital Library

மழைமின விடிகள் மலைகடன் முதல மாண்புடைப் பொருள்களைக் கண்டும், ஞமைநெடுங் கணியின் மைந்தநீ யிலையென் குறையகன் றிலரறி விலர்கள், தழையிடுங் குழலி நிழற்றழை நோக்கித் தழைநிறை வயலெனத் தயங்கும், மழைநிறை பொழிலி னெழிலுறும் பொருள்வை மாமணிச் செல்வமா முகனே. 64

மெய்யினி னீறுங் களத்திற்கண் டிகையும் விளங்குகைச் செபமணி துலங்க, பையவே வாயி லைங்தெழுத் தமரப் பதநினதாலயஞ் சுழலக், கையுலப் பயின்ற மெய்யடி யவர்க்குக் கயிலையொர் காதம தாகச், செய்யுமெய் யுருவ வையனே துய்ய தெய்வமே செல்வமா முகனே. 65

நரைசரை யடைந்து நடைமிகத் தளர்ந்து நயனங்கணமிகவுட்பஞ் சடைந்தும், குரன்மிக மெலிந்துங் குழைசெவியவிந்துங் குறுகியே மெய்யெயி றொழிந்தும்,வாமுறும் விழைவு கிழமுரு திருத்தல் வழங்குதி யெதனினு லென்றே, திரமுறப் பணியு மன்பினர்க் கருளுஞ் செல்வமே செல்வமா முகனே. 66

செல்வமுஞ் செருக்குந் திருநிகர் மனையுஞ் சிறுவருஞ் சேனையு மேனைக், கல்வியுங் கலனுங் கலவியுங் கவினுங் காடுகள் மேடுகள் பிறவும், கல்வளை நமன்றன் றூதுவர் வரினேடுகேள வுதவுமோ கழறாய், நல்வழி யருளு நாயக தூய நம்பனே செல்வமா முகனே. 67

கங்கையின் புதல்வ னெனப்பொறி யடக்குங் கடுந்திறலடைந்திட லென்றே, திங்களிற் குளிர்ந்து திநகர னிருளச் செயுந்தவ வொளியுடை யவர்கள், பொங்கியே போற்றும் புண்ணியா நண்ணுப் புலையனுக் கருளுவாய் பூன்ற,துங்கமெய் யறிவே முத்தனே நித்த சுத்தனே செல்வமா முகனே. 68

குருவடி வாகி வீரமா தவனுய்க் குவலயத் தெனைநிகர்த் தெழுந்து, ஒருவடி வருளி நின்றதை நோக்கி னுயர்வதா மொண்டனிப் பிறவி, மருவுறும் பயனைக் குறைவிலை யெனி

Koviloor Digital Library

னு மநமொடுங் கிடமருந் தருள்வாய், தெருவினி லிருந்து பணி பவர்க் கருளுந் தேவனே செல்வமா முகனே. 69

நின்னுடை யெழில்கொ ணின்மல மேனி நிரந்தர மென் மநத் திருப்ப, பன்னுறு முனது நாமமென் னுவில் படர்தரக் கிடைத்திடி னுய்ந்தேன், தன்னுறும் பெரியர் தவம்புரி மகி மை தங்கிய பொருள்வையிற் றங்கும், பொன்னெழிற் பூசை கொளும்புழை வதநப் பூரணச் செல்வமா முகனே. 70

விகற்பமி லான்ம வத்துவில் விசுவம் விரிந்திடன் மெய்ம் மையி னிலையால், அகப்படு மிதனை மறந்தநு திநமு மையகோ வெப்பதி லுழன்றேன், சுகப்படும் வழியி லுளநிலைத் திடுமா சொரியருள் சுந்தர முருகன், றகப்பனுக் கருள்வன் றமைய னே சாந்தத் தவவுருச் செல்வமா முகனே. 71

அலைந்திடு மநமே யுலகம தாகு மலைவினை யறுத்திடி னுல கங், குலைந்திடுஞ் சுகமுங் குவிந்திடு மிதனைக் குமதியான் குயி ற்றில னென்னே, மலைந்திடும் பிறவிக் கஞ்சுறும் பெரியர் மருவியே பிறவியில் சேரி,மிலைந்திடும் பொருள்வை யரசுசெய் விமல மின்னெழிற் செல்வமா முகனே. 72

விருப்பொடு வெறுப்புஞ் சந்தத மேவி வியனுல குண்மை யென் றெண்ணி, அருப்புப்பொன் முலையார் மோகமே சிரங் கொண் டலைதா னுயென வழகோ, கருப்புவின் மாரன் கடி மலர்ப் பகழி காணுபு கண்டிறந் தெரித்தோன், பொருப்புவில் லழகன் புதல்வனே யமுத பூரணச் செல்வமா முகனே. 73

நாமமொ டுருவ நழுவிட னுனென் னுடிடும் விடய மென் னெனதென், பூமமெய் யுருவ மன்றியொன் றேனு ம் பொலிந்துரு தாதலிற் புகழோய், சேமவப் பதத்தை யடைந் திட வருளாய் செல்வர்கள் தானநீர் பெருகக், கோமகிழ் பொ ருள்வைக் குரிசிலே மறைசொல் குணநிறை செல்வமா முகனே. 74

காரணம் விடுத்துக் காரியம் வாக்கிற் கதித்திடு மலதுவே றிலையால், ஆரண மதுவு முவமையொ டருளு மையனே யதன்

Koviloor Digital Library

கணே நிலைப்பான், பூரண கிருபை செய்திட வேண்டும் புதல்வ தென் னீயறி யாயோ, வாரண முகவ வன்பெரு வயிற வடி வடிச் செல்வமா முகனே 75

குறையிலை நினது பதமலர் குறுகிக் குவலயத் துறுபவர்க் கெனலான், மறைமொழி நினைந்து மருவின னடியன் மாண ருள் தந்துகாத் திடுவாய், மறையரைப் போலப் பறையருங் குடைய மகிழ்தருங் காவிரி விரியும், நறைமலர்ப் பொழில்சூழ் பொருள்வையம் பதிவா ணுயக செல்வமா முகனே. 76

உண்டதே யுண்டு முடுத்ததே யுடுத்து மோதிய கலையை யே யுரைத்தும், கண்டதே கண்டுங் கலவியே கமழ்ந்துங் கடை யனு யிடிற்சிரி யாரோ, பண்டொரு தவனுக் கிரவினிற் றூது பரவையாற் சென்றவ னீன்ற, விண்டவர் வணங்கும் விம லனே முமலம் வீட்டிடுஞ செல்வமா முகனே. 77

மண்டலம் புகழ வாழ்ந்தவர் தாமு மடிந்தபோ தொன்றை யு மருவா, தெண்டிசை யேக வெறிந்திடா துறைந்திங் கென் பயன் கண்டன னடியேன், தண்டமுங் கருணை யாயுறப் புரி யுந் தண்ணளி வீரமா தவனு, யண்டர்கள் புகழ வந்தரு ளிறைவ வரும்பொருட் செல்வமா முகனே. 78

தந்தையோ சிவமெய்த் தாயரோ சிவைநற் றமையரோ நீயுங்கந் தனுமே, செந்திரு மாமி சீரரி மாமன் றிகழுமைத் துனனயன் றமக்கை, யந்தண னுவில் வீற்றவ ளெனவே வையவிம் முறையுற வருளாய், கந்துக முலையர் நிறைதரும் பொருள்வைக் கடவுளே செல்வமா முகனே. 79

முலையினுந் தகரத் தலையினு முடுத்த முளரியங் கலையி னுங் கருங்கண், வலையினு நிதம்ப வலையினு மலையும் வஞ்சனுக் கருளவெண் ணுவையோ, தலையினும் வணங்கிக் கலையினு முளத்தைத் தளையுமெய் யடியவர்க் கருள்வோய், புலையனுந் தவளக் கலைதிரு நீற்றைப் பொதிநகர்ச் செல்வமா முகனே. 80

மலவுட லதனின் மயங்கலென் ஞேரின் மாலல துளது கொன் மருவா, ரிலங்கலை நகைத்த வெழிற்சுவர் ணேச னெ

Koviloor Digital Library

ழிற்பெயர் நாயகி யீன்ற, தலவிநா யகனே தயைநிறை கண்ணு
தக்கசிங் காரவேற் றமைய, மலமற வருள லென்றெனக்
கையா மாசிலாச் செல்வமா முகனே. 81

மெய்யறு விடயந் தனைச்சுயம் விடுக்கின் புகழ்திகழ் வீடு
மா மதுவே, பையவே பகலி னுயிரையுங் கொண்டே பரதவித்
திடவலி தேகும், ஐயகோ விதனை யுலகின ரறியா வரியமா
யையின்செய லென்னே, வெய்யவன் விழுகச் சோலைசூழ்
பொருள்வை வித்தகா செல்வமா முகனே. 82

சிங்கமே லமர்ந்தெண் புயத்தனு கியதுஞ் செறிமயி லாறு
தோட் டிகழ்வும், இங்கித நான்கு புயங்கய வதந மிரக்தமெய்
யிருபுய வெளுமை, யங்கமா கியது மநுதிந மநத்தி லன்புட
னினைந்துவாழ்த் திடுவேன், சங்கரி குமர சங்கரி மருக சந்ததச்
செல்வமா முகனே. 83

கயமுகன் பால சந்திரன் சாக்ஷிக் கணபதி துண்டிநா யக
னே, டயமுறு மிறைவன் றமையசீர்ச் சிந்தா வணிமணி யைய
னே யென்னு, நயமுடன் செபித்துப் பாவியே வாழ்த்து
நாளுமுண் டோவென நினைவேன், பயமற வருளும் பண்
பனே மறைகள் பகர்ந்திடுஞ் செல்வமா முகனே. 84

அறுகொடு நீரு மளித்திடும் பாலர்க் கரியகல் வியினைமிக்
களிதில், மறுதிநத் தருளும் மாண்புமற் றெவர்க்கு மருவிடுங்
குருவர வருளாய், சிறுவருந் தேவர் குருவொடும் வாதிற் செய
ங்கொளு மாற்றல்கைக் கொண்ட, நறுமணச் சோலைப் பொ
ருள்வைநன் னகர்வா ழுதனே செல்வமா முகனே. 85

வாதனை யிலது மங்கைய ராசை மறந்துமற் றையரையான்
காணின், தீதகல் தாயென் சௌந்தர்ய தேவி திருவுருவெனமந
நினைய, நீதரல் வேண்டு மருளினை யுனையா னித்திய மறந்தி
டே னிமலா, போதொடு நீர்கொண் டருச்சனை புரியும் பொரு
ள்வைவாழ் செல்வமா முகனே. 86

நினைநிதம் பணிந்த வௌவையாந் தேவி நிகாறு மதன
னைப் பொடித்தே, யனையென விளங்கல் கண்டியா னினதம்

Koviloor Digital Library

மடியிணை மருவின னருளாய், புனைதரு மாலை யமரர்கள் கவ ரப் புரிசைக ளிலங்குறும் பொருள்வைத், தனைநினை யமலர் வணங்குறு மிறைவ தற்பரச் செல்வமா முகனே. 87

சுகமய மாகுஞ் சொல்லுறு முலகஞ் சொற்றிடி லுண்டெ னப் பெரியர், நகைமய மாகு நாவிலே வளரு நற்றவ மிலாறி வாரோ, மகமய மாகும் பொருள்வைமா நகரின் மாகமோ மாக மை மறைக்கும், புகைமய மாகு மெனப்புகழ் நகரப் புங்கவச் செல்வமா முகனே. 88

தகர்சிரந் தாங்கு மகிமையே யலது தங்கிடும் பயனிலை சிவன்றன், பகையெனல் வெளியா யிருக்கவுஞ் சிவனைப் பாடி டா வன்மையென் வன்மை, புகாருஞ் சீட ருடல்கெட வே வும் புங்கசிங் காரவே லிறைவன், அகங்குடி கொளுமென் னண்ணலே யரியோ யப்பனே செல்வமா முகனே. 86

வெளியிற்செல் காற்றிங் குளின்முனின் மீண்டு மிளிர் தரா விடினென்னு மிவைகள், களியிற்சென் றிருத்த லென்னை யென் றுள்ளே கருதிடிற் பெறுதலாம் நினது, அளியிற்செய் பாத மாநந்த வடிவ வம்பிகை நந்தன மழையின், தெளியிற்செய் விளையும் பொருள்வைமா நகர்வாழ் செழுஞ்சுடர்ச் செல்வமா முகனே. 90

தன்னுடற் றசையை நுகர்ந்தில ரழுகித் தளைபுழு வொழு கயத் தசையை, மன்னுபொற் கலத்தி லமைத்துள மகிழ்ந்து மலப்பொதி நிரப்புவர் மறைத்தே, இன்னவ ரிவனென் றேகி னெஞ் சூரகை யெய்துவ ருரைத்தியெங் குரவ, பொன்னுவ பொருள்வை மாநகர்ப் புரிய புன்னகைச் செல்வமா முகனே. 91

மனுடனு யுற்றேன் கலைகளுங் கற்றேன் மலரடி பரவிடப் பெற்றேன், எனுடல்வே றறிவு வேறெனப் பெற்றே னிலங் கது மியானெனப் பெற்றேன், இனியருஞ் சீவன் முத்தியி லிருந்திங் கின்பமே யடைந்திட வருளாய், கனிநிறை பொழில் சூழ் பொருள்வைவா ழிறைவ கண்ணுதற் செல்வமா முகனே.

Koviloor Digital Library

மாமிறந் தரிய வாதனை யிறந்து மன்னிய சமாதியி லிரு ந்து, கனவறி வுருவாங் கண்ணினி னினைக்காண் கருதரும் பாக்கியங் கதுவும், திருமெனக் குளதோ திசைமுகன் படைப் பைச் செய்யுஞ்சிங் காரவேற் றமைய, அனமகிழ்ந் தடங்க லழ குட னிலங்கு மருநகர்ச் செல்வமா முகனே. 93

கனியினிற் பிரிய நினக்கென வறிவேன் கந்தனு நீயுமுன் முரணித், தனியனை வலம்வந் துற்றதா லெனது தளைமகக் காய யி லாயோ, இனியெந்நா ளறியே னின்புரு வாகி யிந்துவைப் போன்முகங் குளிர்ந்து, தனியனு யிருத்த லறிகிலேன் றயை செய் தமையனே செல்வமா முகனே. 94

தண்டையங் தாளுந் தனிப்பெரு வயிறுந் தலயினற் பெரு மையுந் தாவி, விண்டல மேவு மூஷிக நடையும் வேண்டிய கொடுத்திடுங் கொடையும், அண்டர்கள் போற்றும் பூதவே தாள வரியதோர் படையுங்கண் காணல், துண்டிரா ஜேச வெந்நா ளுரையாய் துகளறுஞ் செல்வமா முகனே. 95

கேட்டதே நினைந்துங் கெட்டதே மொழிந்துங் கெட்டதே யியற்றியுந் திரியும், மட்டியா மெனையு மடிமையாய்க் கொண்டே மலரடி பாவிடச் செய்த, சிட்டமாக் கருணை யென்னென வுரைப்பேன் செழுந்திரு வமைத்துப்பூ சனைசெய், யிட்டனு ரீன்றவிறைவனே நிறைவே யின்பமே செல்வமா முகனே. 96

அறிவுரு வாய வருவமே யகில வறிவுறு மருவுரு வாசே, பொறிசெலு மரிய வுருவமே கரியின் புடையமர் வல்லபை கொழுநா, நெறிசெலு மடியர் தவவுவர் மண்ணுார் நிகரறு பொ ருள்வைமா நகரோய், மறைமுடி யறையு மாண்புமிக்கவனே மணிமுடிச் செல்வமா முகனே. 97

முப்புர மெரிக்க வெந்தையு மகிடன் முடிகொள வன் னையு மாமன், செப்புமா வலியை யாழ்த்திட மதனன் செயங் கொள வுலகினை முருகன், கப்புறு கயத்தின் முகத்தனைக் காதக் கடையனேன் மநத்தினைக் காத, அப்பமு மவலுங் கொளுநினை யலதிங் கடைந்திலஞ் செல்வமா முகனே. 89

Koviloor Digital Library

எனையறி யாதிங் கெவ்விடத் திருந்தோ வெழுந்திடும் வாத
னைக் குழுக்கள், உனையறி யாமற் றடுத்திடுஞ் சாந்தி யுறச்செ
யா தொடுக்கிட வருளாய், வினையறி யாமல் வெளியுளில் விக
ற்பம் விரும்பிடா வறுவகைச் சமாதி, தனையறி யோகர் போற்
றிடு மிறைவ சாந்தனே செல்வமா முகனே. 99

மூவர்கள் தமக்கு முத்தொழி லளித்த முதல்வனே நின்க
ழல் போற்றி, ஆவல்செய் சித்தி புத்திவல் லபையார்க் கருளி
டும் வள்ளலே போற்றி, ஏவுமெம் முகந்த தேசிகன் பணியு
மெழிற்கழ லிறைவனே போற்றி, மாவுறும் பொருள்வை வீர
மா தவனே மகிழ்தருஞ் செல்வமா முகனே. 100

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீசெல்வவிநாயகர் செம்பொன்மாலை

முற்றும்.